Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்

INTERNET

மூலம் தொடர்புகொள்ள உள்நாடு, வெளிநாடுகளுக்கான சகலவிதமான துரித தபால்/பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

இல.46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி

T.P -021-222-7310

(சி-1844)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 03 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 23 (18.12.2003) வியாழக்கிழமை இதழ் :79

## யாழ். படைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சந்திரபால பதவியேற்பு!



கடமையை பொறுப்பேற்கும் மேஜர் ஜெனரல் சந்திரபால





படையினரின் அணிவகுப்பை ஏற்கும் மேஜர் ஜெனரல் சந்திரபால.

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுக்கான புதிய படைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால நேற்றுக்காலை பலாலி இராணுவத் தலைமையகத்தில் தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

யாழ்.படைகளின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தொண்டர் படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்தே, மேஜர் ஜெனரல் சந்திரபால அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நேற்றுக்காலை பலாலியிலுள்ள இராணுவத் தலைமையகத்துக்கு வந்த மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவுக்கு அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது.

மதகுருமார் மற்றும் இராணுவ அதிகாரிகள் கலந்துகொண்ட இந்தப் பதவியேற்பு நிகழ்வை அடுத்து, மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால நல்லூர் கந்தன் ஆலயத்துக்கும் சென்று வழிபட்டார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம்; உடனடியாக கைச்சாத்திடப்பட வேண்டும்!

### பொதுஜன ஐக்கிய முன்னணி வற்புறுத்து

(கொழும்பு)

**இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தத்தினை ஐக்கிய தேசிய முன்னணி அரசு உடனடியாக கைச்சாத்திடப்படவேண்டும் என பொதுஜன ஐக்கிய முன்னணி வலியுறுத்திக் கேட்டுள்ளது.**

நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சு மீதான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தை, பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சார்பில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வாவே இவ்வாறு வற்புறுத்தினார்.

அவர் மேலும் கூறுகையில்,

பிரதமர் ரணிலின் அரசாங்கத்திடமிருந்து ஜனாதிபதி சந்திரிகா மூன்று அமைச்சுக்களை ஒருதலைப்பட்சமான முறையில் பொறுப்பெடுத்தமை அவரது தன்னிச்சையான செயற்பாட்டையே காட்டுகின்றது.

ஆனாலும் ஜனாதிபதி சந்திரிகாவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்பாடு ஏற்படுத்துவது குறித்து ஒரேமாதிரியான கருத்தையே கொண்டுள்ளனர். அதில் எந்த வேறுபாடும் இல்லை இந்தியாவுடன் செய்யப்படும் பாதுகாப்பு ஒப்பந்தத்தை நாம் எக்காரணம் கொண்டும் ஒத்திவைக்கக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டுக்கு நாடாளுமன்றம் அங்கீகாரம்!

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு 120 பெரும்பான்மை வாக்குகளால் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

இந்த நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக 132 வாக்குகளும் எதிராக 12 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஐக்கிய தேசிய முன்னணி, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி, ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் இதற்கு ஆதரவாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர்.

வாக்களிப்பு நடைபெற்ற சமயம் புளொட் உறுப்பினர்கள் சபையில் இருக்கவில்லை.

இதேவேளை - உள்துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடும் 125 வாக்குகள் வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டது. ஊடகத்துறை

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கூட்டணியின் மத்திய குழுவுக்கு நீதிமன்று இடைக்காலத் தடை!

(கொழும்பு)

அம்பாறையில் நடத்தப்படவிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தை தடைசெய்யும் இடைக்கால உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்றுப் பிறப்பித்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் உட்பட ஏனைய கூட்டங்களையும் தனது அனுமதியின்றிக் கூட்ட முயல்வதாகத் தெரிவித்து, கட்சியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கொழும்பு மாவட்ட நீதிமன்றில் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்தே இந்தத் தடையுத்தரவை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இதனால் எதிர்வரும் 21 ஆம் திகதி அம்பாறை - திருக்கோயிலில் இடம்பெறவிருந்த கட்சியின் செயற்குழுக் கூட்டத்தை நடத்த முடியாத ஒரு நிலை உருவாகியுள்ளது.

இந்தத் தடையுத்தரவு எதிர்வரும் 31 ஆம் திகதிவரை அமுலில் இருக்குமெனவும், நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள ஆனந்தசங்கரிக்கு அழைப்பு விடுவது எப்படி?

**கேள்வி எழுப்புகிறார் சம்பந்தன்**

(கொழும்பு)

கட்சியின் மத்தியகுழு ஆனந்தசங்கரியை தலைவர் இல்லையெனத் தீர்மானித்தபின் கட்சிக் கூட்டத்திற்கு அவரை எப்படி அழைக்க முடியுமென கேள்வி எழுப்பியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன்.

நேற்றிரவு பி.பி.சி. தமிழோசைக்கு அவர் அளித்த செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

எதிர்வரும் 21 ஆம் திகதி அம்பாறையில் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்களைச் சந்திப்பதற்கான சாதாரண பொதுக்கூட்டமே நடைபெறவுள்ளது.

கட்சியின் விதிகளின்படியும், இதுவரை கூட்டப்பட்ட கட்சிக் கூட்டங்களின்படியும் செய

(10 ஆம் பக்கம் பார்க்க)

### புலனாய்வாளர் மீது சூடு; விசாரணைகள் ஆரம்பம்!

(கொழும்பு)

இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருக்குத் தகவல்களை வழங்கிவந்த ஒருவரைக் கொல்வதற்கு கொழும்பில் முயற்சிக்கப்பட்டதை அடுத்து, புலனாய்வாளர்களைக் கொல்லும் நடவடிக்கையில் புலிகள் இறங்கியுள்ளனரா என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகளைப் பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### அத்துமீறி மீன் பிடித்த 8 இந்திய மீனவர் கைது!

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் அதிகாலை நூற்றுக்கு மேற்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் அத்துமீறி மீன் பிடித்தலில் ஈடுபட்டதாகவும் - இவற்றுள் இரண்டு படகுகளை தாம் கைப்பற்றியதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணியளவில் ஊர்காவற்றுறை கடற்பரப்பில் அத்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சி மாவட்டத்திற்கு 500 தொலைபேசி இணைப்புகள்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்துக்கு மேலும் ஐந்நூறு தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண 'ரெலிகொம்' பணிப்பாளர் எஸ்.கனகசூரியர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், பரந்தனில் புதிதாக அமைக்கப்பட்ட தொலைத்தொடர்பு கோபுரமூடாக நாளை இந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

### ஜப்பானிய அதிகாரிகள் கிளிநொச்சிக்கு விஜயம்!

(கிளிநொச்சி)

ஜப்பானிய உயர்ஸ்தானிகராலயத்தின் உயர் அதிகாரிகள் குழு - சிரான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வினை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த ஜப்பானிய உயர் ஸ்தானிகராலயத்தின் இரண்டாவது செயலாளர் கனாக்கா, சேவாலங்க திட்டப் பணிப்பாளர் லக்சி அபய

(10 ஆம் பக்கம் பார்க்க)




EXPOAIR
your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
(சி -1845)

எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# 1985 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட வழக்குகள் யாழ் மேல் நீதிமன்றில் தேக்கம்

## நீதிமன்ற வட்டாரங்கள் தகவல்

1985 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட வழக்கு விசாரணைகள் யாழ். மேல் நீதிமன்றில் தேங்கிக் கிடப்பதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நாட்டில் ஏற்பட்ட போர்க்காலச் சூழ்நிலை காரணமாக நீதிமன்ற நடவடிக்கைகள் நீண்டகாலமாக தடைப்பட்டு போயிருந்ததாலேயே, வழக்கு விசாரணைகள் தேங்கிக் கிடந்தன.

கடந்த 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ். மேல் நீதிமன்றம் இயங்கத் தொடங்கிய பின்னர் தேங்கிக் கிடந்த பல வழக்கு விசாரணைகளுக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவ் வழக்குகளில் குற்றவாளிகளாக குறிப்பிடப்பட்டுள்ள பலர் இறந்தும், நாட்டைவிட்டும் வெளியேறியுள்ளனர்.

இவ் வழக்குகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு குற்றச் செயல்கள் நடைபெற்ற காலப்பகுதிகளில் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உதவிகள் கோரப்பட்டுள்ளன. இவர்களுள்ளும் பலர் இறந்தும், நாட்டைவிட்டு வெளியேறியுள்ள சூழ்நிலையிலும் ஒரு சிலரே வழக்கு விசாரணைகளின் போது மன்றில் ஆஜராகி நெறிப்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் பாலியல் வல்லுறவுகள், கொலைகள், கொள்ளைகள் போன்ற பல விசாரணைகள் தற்போது மீண்டும் எடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்டும் வருகின்றன. குற்றவாளிகளின் அனுமதியோடு சில சந்தர்ப்பங்களில் யூரிமார்களின் உதவியும் பெறப்படுவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.(ச)

# நாவாந்துறை வீடொன்றில் பணம், நகை கொள்ளை

நாவாந்துறை தெற்கில் வீட்டுக் கூரையைப் பிரித்து இறங்கிய திருடர்கள் இரண்டு லட்சம் ரூபாய் பணத்தையும், 75 பவுண் எடையுள்ள நகைகளையும் துணிகரமாகத் திருடிச் சென்றுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது-

கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை இரவு நாவாந்துறை கடற்கரை வீதியிலுள்ள ஆசீர்வாதம் இம்மனுவல் என்பவரது வீட்டில் இரும்புப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த நகைகள், பணம், ஆகியவையே திருட்டுப் போயுள்ளது.

வீட்டில் வீட்டுக்காரருடன் மகள், மருமகன் ஆகியோர் இருந்ததாகவும், மேசை லாச்சியில் வைக்கப்பட்டிருந்த இரும்புப்பெட்டிச் சாவியை எடுத்து திருடர் இத்திருட்டை லாவகமாக நடத்திச் சென்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை திருட்டை நடத்தியவர்கள் கொண்டுவந்த கைக்குண்டொன்றை விட்டுச் சென்றிருந்ததாகவும், பொலிஸார் அக் கைக்குண்டை மீட்டுச்சென்றதாகவும் கூறப்படுகிறது.(206)

ராஜா யாழ்ப்பாணம்.
தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த
எனக்கு 20 உனக்கு 18
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1847)

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல்
ரஜனி, மீனா, ரோஜா நடித்த
வீரா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
JACKIECHAN நடித்த
"WHO AM I" (கராட்டிப் படம்) (சி-1846)

# தடைசெய்யப்பட்ட அமைப்பிற்கு வாய்மொழி மூலம் ஆதரவு வழங்குவது பொடா சட்டத்தில் குற்றமாக கருதமுடியாது

## உச்சநீதிமன்றம் தெரிவிப்பு

தடைசெய்யப்பட்ட அமைப்பிற்கு வாய்மொழியில் ஆதரவு வழங்குவது பொடா சட்டத்தின் கீழ் குற்றமாகக் கருதமுடியாது என உச்ச நீதிமன்றம் கருத்துத் தெரிவித்துள்ளதால் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பிணையில் வெளிவர வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

ஆனால், நான் பிணைகோர மாட்டேன் என வைகோ ஆரம்பத்தில் இருந்தே கூறிவருகிறார். பொடா சட்டத்தின் 20,21 ஆவது பிரிவுகளின் கீழ்தான் வைகோ கைதாகியிருக்கிறார். உச்ச நீதிமன்றம் கூறியுள்ள கருத்தின்படி இப்போதைய சூழலில் அவர் பிணை கோரமுடியும் என சட்ட நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பிணை பெற அவர் விரும்பினால், பொடா சிறப்பு நீதிமன்றத்தில் அவர் மனு தாக்கல் செய்யவேண்டும்.

மேலும், பொடா சட்டத்தில் கைதானவர் ஓராண்டுக்கு மேல் சிறையில் இருந்தால் அவர் பிணை பெற தகுதியானவரே என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. வைகோ உள்ளே போய் ஓராண்டுக்கும் மேல் ஆகிவிட்டது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொள்ள சென்னை உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் தடை விதித்தது குறித்துக் கலலைப்படவில்லை. எனது அரசியல் வாழ்க்கையில் எத்தனையோ தோல்விகளைச் சந்தித்துள்ளேன். இது மற்றொரு தோல்வி என்று வைகோ கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடந்த பொடா சட்டத் திருத்த மசோதா மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ள வைகோ அனுமதி கோரியிருந்தார். இதற்கு உயர் நீதிமன்ற தனி நீதிபதி குலசேகரன் அனுமதி வழங்கினார். ஆனால், டிவிஷன் பெஞ்ச் நீதிபதிகள் சிர்புர்கர், கண்ணதாசன் ஆகியோர் இதை ரத்து செய்து உத்தரவிட்டனர்.

பொடா நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்ட வைகோவிடம் இத் தீர்ப்பு குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு முகத்தில் கொஞ்சம் கூட ஏமாற்றமே தெரியாமல் வைகோ பதிலளித்தார். எனது அரசியல் வாழ்க்கையில் எத்தனையோ தோல்விகளைச் சந்தித்துள்ளேன். இது இன்னொரு தோல்வி அவ்வளவுதான்.

நீதிபதி குலசேகரன் உத்தரவு குறித்து அறிந்ததும், நாடாளுமன்ற விபாதம் தொடர்பாக எனது பேச்சை தயார் செய்யத் தொடங்கினேன். அப்போது சிலர் வார்டர்கள் வந்து சிறைக்கு வெளியே சில வாகனங்கள் வந்துள்ளதாகவும், என்னை எப்போது வேண்டுமானாலும் டெ‹லிக்கு அழைத்துச் செல்வார்கள் என்றும் தெரிவித்தனர்.

பின்னர் சிறிது நேரம் கழித்துத் திரும்பிவந்த அவர்கள், வாகனங்கள் அனைத்தும் போய்விட்டதாகவும், எனது மனு நிராகரிக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்தார்கள். இரண்டையும் நான் ஒரே மனோபாவத்தில் தான் எடுத்துக் கொண்டேன் என்றார் வைகோ.

இந் நிலையில் பொடா சட்டத் திருத்தம் மக்களவையில் நிறைவேறியது. வாக்கெடுப்பை காங்கிரஸ், இடதுசாரிகள் உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் புறக்கணித்தன. அ.தி.மு.க. மத்திய அரசிற்கு எதிராக வாக்களித்தது.

தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க. ஆகியவை சட்டத்திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.

### வீடியோ படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் வசந்த ஒபசேகராவின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட " தீர்த்த யாத்ரா " என்ற சிங்களத் திரைப்படம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படும். இத்துடன் சிறந்த தமிழ் எழுத்தாளரான அசோகமித்திரனைப் பற்றி அம்ஷன் குமார் உருவாக்கிய விவரணப் படமும் காண்பிக்கப்படும். படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளரான அ. யேசுராசா தலைமையில் கலந்துரையாடல் இடம்பெறும். ஆர்வலர்கள் கலந்துகொள்ளலாம் என்று இணைப்பாளர் தெரிவித்துக்கொள்கின்றார்.


கொழும்பு = யாழ் = வடமராட்சி
பயணிகளுக்கோர் வரப்பிரசாதம்
குளு குளு வசதிகளுடன் கொழும்பு - யாழ் - வடமராட்சிப் பயணிகளுக்கான பேருந்துச் சேவை
தொலைக்காட்சி வசதிகளுடன், குளுமை, சொகுசு விரைவு, நாணயம், ஒருங்கிணைந்த இனிய பயணம்
ஆசனப்பதிவும் - இடங்களும்
சேவை நாட்களும் - புறப்படும் இடங்களும்
கொழும்பிலிருந்து புதன், சனி - வார நாட்களில் இரவு 8 மணி
றொலெக்ஸ் ஹோட்டல் வெள்ளவத்தை
யாழ்/வடமராட்சியிலிருந்து
ராஜன் சைக்கிள் வேக்ஸ்
பருத்தித்துறை.
தொலைபேசி 2264013, 2263248
லவ்லி றெக்கோடிங் சென்டர்
பிரதான வீதி, நெல்லியடி.
ஈஸ்வரன் கொமினிகேசன்
வேம்படி, வல்வெட்டித்துறை.
தொலைபேசி-2263547
றொலெக்ஸ் ஹோட்டல், யாழ்ப்பாணம்.
(சி-1898)

பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!
எமது ஸ்தாபனத்தின் 45ம் வருட பூர்த்தியை முன்னிட்டு 5% - 50% விலைக்கழிவு இம்மாதம் 15.11.03 - 31.01.04 வரை பாடசாலை, பல்கலைக்கழக பாடப் புத்தங்களுக்கு வழங்கப்படும். இப்பொழுது பாடசாலை தவிர்ந்த ஏனையவர்களுக்கும் டிவான் டின்ஸ் கணக்குக் குற்றிகள் வழங்குகின்றோம்.
இன்றே விஜயம் செய்யுங்கள்.
பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், பேப்பர் வகைகள், பெயின்ற் வகைகள் மற்றும் தரமான உள்ளீட்டுப் பொருட்களுக்கான மூலதனப் பொருள்கள், அழிபொருள்கள், வாத்தியக் கருவிகள், விளையாட்டுப் பொருள்கள், அலுவலக அலுமாரி, அலுவலக மேசைகள், பயில் அலுமாரி, கம்பியூட்டர் மேசைகள், புத்தக றாக்கைகள், ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள், ஆய்வுகூட உபகரணங்கள், O.H.P புறஜெக்ரர் மற்றும் 'அறிவு அமுது', 'அந்திவானம்' பதிப்பகங்களின் பதிப்புக்கள், வெளியீடுகள் யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
குறிப்பு:- எம்மிடம் டிவான் டின் குற்றிகளுக்கு பதிவு செய்தவர்கள் உடன் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
"பாடசாலை மாணவர்களின் நன்மைகருதி சனிக்கிழமை முழுநாளும், ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிவரை திறந்திருக்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்"
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
021 222 5542
212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-1897)

## கட்டுநாயக்கா விமானநிலையம் மீதான தாக்குதல்

# உதவியதாக குற்றம் சாட்டப்பட்ட எட்டுப் பேரின் வழக்குகள் வாபஸ்

கட்டுநாயக்கா விமான நிலையம் மீதான தாக்குதல் சம்பவத்துக்கு உதவியதாக குற்றம் சாட்டப்பட்ட 8 பேருக்கு எதிரான வழக்குகளை சட்டமா அதிபர் வாபஸ் பெற்றதை அடுத்து, அவர்கள் நேற்றுமுன்தினம் கொழும்பு நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட இரு சந்தேகநபர்களை அடுத்தமாதம் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆம் திகதி கட்டுநாயக்கா விமானநிலையம் தாக்கப்பட்டது. இந்தச்சம்பவத்தின்போது, 7 படையினர் உயிரிழந்ததுடன், விமானநிலையத்தில் தரித்துநின்ற விமானங்களும் சேதமடைந்தன. இதன்போது கோடிக்கணக்கான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டது.

இந்தச்சம்பவம் தொடர்பாக, தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில்- பீற்றர், நிமலராஜன் பொன்னுத்துரை ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். இவர்களுக்கு நிதி உதவியும் அனுசரணையும் வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, 8 பேர் கைதுசெய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக, நீர்கொழும்பு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு - நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, குற்றம் சாட்டப்பட்ட 8 பேருக்கும் எதிரான வழக்கில் - அவர்களது குற்றத்தை நிரூபிப்பதற்கு போதிய ஆதாரம் இல்லாததால், சட்டமா அதிபர் வழக்கிலிருந்து வாபஸ்பெற்றார். இதனை அடுத்து இந்த 8 பேரும் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனா.

தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட இருவரையும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. (01)

## நாட்டின் அசாதாரண சூழலால்

# பெற்றோலியத்துறையில் முதலிடும் எண்ணத்தை 'செல்' நிறுவனம் தற்காலிகமாகக் கைவிட்டது!

நாட்டில் நிலவும் அசாதாரண அரசியற்சூழ்நிலை காரணமாக - பெற்றோலியத்துறையில் முதலீடு செய்யும் தமது எண்ணத்தை, 'செல்' நிறுவனம் தற்காலிகமாகக் கைவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் பெற்றோலியத் துறையில் முதலீடு செய்வதற்குரிய அனுமதியைக்கோரி, இந்த நிறுவனம் கடந்தவருடம் அரசிடம் விண்ணப்பத்தைச் செய்திருந்தது.

அந்த விண்ணப்பத்தையே இந்த நிறுவனம் தற்போது வாபஸ் பெற்றுள்ளது. நாட்டில் நிலவும் அரசியல் ஸ்திரத்தன்மையின்மை காரணமாகப் பொருளாதாரம் மிகவும் பாதிப்படைந்துள்ளதாகவும், இந்தநிலையில் புதிய முதலீடுகளை மேற்கொள்வது உகந்தது அல்ல எனவும், இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே சிம்பெக்கோ, இந்தியன் ஓயில் ஆகிய நிறுவனங்கள் பெற்றோலியத்துறை தொடர்பாக இலங்கையிலேயே முதலீடு செய்துள்ளன. இந்தியன் ஓயில் நிறுவனம் திருகோணமலையிலுள்ள 99 எண்ணை -தாங்கிகளை நீண்டகால குத்தகைக்கு எடுத்துள்ளது. இவற்றுள் 14 தாங்கிகள் மட்டுமே தற்போது பாவிக்கக்கூடிய நிலையிலிருப்பதாகவும் -

ஏனையவற்றைப் புனரமைக்கும் பணிகள் இடம்பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாங்கிகளில் ஒன்றின் மூலம் மட்டுமே பன்னிரண்டாயிரத்து இருநூற்றைம்பது கிலோ லீற்றர் எண்ணையை சேகரித்து வைக்கமுடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (01)

## மாகாணசபை தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ்

# தனித்தே போட்டியிட அரசியல்பீடம் முடிவு!

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் - முஸ்லிம் காங்கிரஸ் தனிக் கட்சியாகப் போட்டியிடப் போவதாக தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அரசியல்பீடம் கூடி ஆராய்ந்துள்ளது. இந்தக் கூட்டத்திலேயே இவ்வாறு முடிவெடுக்கப்பட்டது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு - ஐக்கிய தேசியக் கட்சி வழங்கிய உறுதிமொழிகள், உறுதிப்பாடுகள் இன்னமும் நிறைவேற்றிக்கொள்ளவில்லை என்றும், எனவே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனியாக இந்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்றும், பேரம்பேசும் சக்தியாக உருவாகவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விரைவில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர்பீடம் கூடவுள்ளது. அதில் மேலும் ஆராயப்படவுள்ளது எனவும் கூறப்படுகிறது.

அதியுயர்பீடம்கூடி - ஐக்கிய தேசியக் கட்சி கொடுத்த வாக்குமூலங்கள் நிறைவேற்றப்படும் என்று உறுதிமொழி கிடைக்குமாக இருந்தால், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டால், பெரும்பாலான தொகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியுறும் என்று முஸ்லிம் காங்கிரஸ் கருதுகின்றது.

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் மீன்பிடித்துறைக்கு அதிக நன்மை

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் - நாட்டின் மீன்பிடித்துறைக்கு பல நன்மைகள் கிடைத்துள்ளதாகக் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஆசிய மீன்பிடிகளுக்கான சர்வதேச அமைப்பும், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சமமேளனமும் இணைந்து கொழும்பில் நடத்திய செயலமர்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் செயலமர்வில் ஐந்து நாடுகளைச் சேர்ந்த 40 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அமைச்சர் பீரிஸ் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், மீன்பிடித் துறையினை ஓர் ஏற்றுமதித்துறையாக அரசாங்கம் இனங்கண்டுள்ளது. எனவே, இலங்கையில் மீன்பிடி குறித்து முக்கிய கவனம் செலுத்தப் படவேண்டும். உண்மையில் கடந்த காலங்களில் இவை குறித்துக் கவனம் செலுத்தப்படவில்லை.

ஆனால், தற்போது அரசாங்கம் இதற்கான திட்டங்களைத் தயாரித்து வருகின்றது. இது குறித்து வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ளது. இந்தச் செயலமர்வில் பங்குகொண்ட ஐந்து நாடுகளின் உறுப்பினர்களும் சேர்ந்து, சர்வதேச திட்டம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளோம். இதன்மூலம் மீனவர்களுக்கு சிறந்த மீன்களைப் பிடிப்பது தொடர்பாகவும் அவர்கள் பிடித்த மீன்களை ஏற்றுமதி செய்வது தொடர்பாகவும் கவனம் செலுத்தப் படவுள்ளது. அத்துடன் இந்தச் செயலமர்வு இன்றும் நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொரளை தீ விபத்தில் மூன்று கடைகள் சேதம்

கடைத் தொகுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில்- மூன்று கடைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் கொழும்பு பொரளை சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றது.

சம்பவநேரம் பத்துப்பேர்வரை கடையின் மேல்மாடியில் இருந்துள்ளனர். அவர்களை தீயணைப்புப் பிரிவினர் எவ்வித காயங்களும் இன்றி காப்பாற்றினர்.

இந்தத் தீ விபத்துக்கு - மின்சாரக்கோளாறே காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (01)

# பிரபாகரன் என பெயர்சூட்டினார் வைகோ; பொடா நீதிமன்றத்தில் சாட்சி தெரிவிப்பு!

(சென்னை)

மதுரை திருமங்கலத்தில் நடந்த பொதுக்கூட்டத்தின்போது இரு குழந்தைகளுக்கு திலீபன், பிரபாகரன் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பெயர்சூட்டியதாக, தி.மு.கவினைச் சேர்ந்த மாயாண்டி என்பவர் பொடா நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பொதுக்கூட்டத்தில் பேசியதாக, பொடா சட்டத்தின்கீழ் தொடரப்பட்டுள்ள வழக்கில் சாட்சியங்களின் விசாரணை நடந்து வருகின்றது. விசாரணையின்போது திருமங்கலம் அருகே உள்ள சத்திரப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மாயாண்டி என்பவர் சாட்சியம் அளித்தார். இவர் வைகோ பொதுக்கூட்டத்தைப் பார்த்தவர் என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

மாயாண்டி தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது -

நான் தி.மு.கவைச் சேர்ந்தவன். எப்போதும் தி.மு.க. உறுப்பினர் அட்டையை சட்டைப்பையில் வைத்திருப்பேன். ஆனால், திருமங்கலத்தில் நான் பஸ் தரிப்பிடத்தில் நின்றிருந்தபோது, வைகோ பொதுக்கூட்டம் தொடர்பாக - பொலிஸார் விசாரணை நடத்தியபோது என்னிடம் உறுப்பினர் அட்டை இல்லை என்றார்.

அப்போது குறுக்கிட்ட வைகோ தரப்பு சட்டத்தரணி தினகரன், உங்களுக்கு விடுதலைப் புலிகள் குறித்தோ, அவர்களது அரசியல் போராட்டம், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான போராட்டம் குறித்தோ தெரியுமா எனக்கேட்டார்.

அதற்கு மாயாண்டி, விடுதலைப் புலிகள் குறித்து எனக்குத் தெரியாது. ஆனால், தமிழகத்தில் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு முகாம்கள் இருப்பது தெரியும் என்றார். அவர் தொடர்ந்து தெரிவிக்கும்போதே, திருமங்கலம் பொதுக்கூட்டத்தில் இரண்டு குழந்தைகளுக்கு திலீபன், பிரபாகரன் என்று - வைகோ பெயர் சூட்டியதாகவும் குறிப்பட்டார்.





பிரதமர் ரணில், முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் பொலிஸ் அதிகாரி உடுகம்பொல ஆகியோரைக் கைதுசெய்யும்படி தேசாபிமானிகள் சங்கம் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியையும், பேரணி முடிவில் மகஜர் கையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# வடபகுதிக்கான புனரமைப்புப் பணிகள் யாவும் புலிகளுடன் இணைந்து செயற்படுத்தப்படும்

## அமைச்சர் ஜயலத் ஜவர்த்தன தெரிவிப்பு

வடபகுதிக்கான புனரமைப்புக்களை விடுதலைப் புலிகளுடன் இணைந்த வகையில் செயற்படுத்துவதற்கு தாம் விருப்பம் கொண்டுள்ளதாக, புனரமைப்பு புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வடக்கு - கிழக்கு புனரமைப்பிற்கான நிதி ஒதுக்கீட்டின் விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்ட நகலை விடுதலைப் புலிகள் சமர்ப்பித்திருக்கும் வேளையில், தற்போது அரசாங்கத்தினால் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த நிலையில் ஒதுக்கப்பட்ட நிதியை அபிவிருத்திக் கணக்காக வடக்கு - கிழக்கில் கையேற்கின்ற நேரம், தங்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வது நல்லது என்றும், அதன் அடிப்படையிலே அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டுசெல்ல முடியும் என்றும் விடுதலைப் புலிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதன் அடிப்படையிலேயே தாம் அதற்கு உடன்படுவதாகவும், இவ்வாறான ஒரு வேலைத்திட்டம் இருந்தால்தான் அபிவிருத்தித் திட்டங்களை ஒழுங்குடன் மேற்கொள்ளலாம் என்றும்,

இந்த வேலைத் திட்டம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் மற்றும் சந்திப்புக்களையும் நடத்தத் தான் தயாராக இருப்பதாகவும் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன மேலும் தெரிவித்தார். (01)

## முன்பள்ளி திறந்துவைப்பு

ஹேமாஸ் நிறுவனத்தினரின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட சிறுவர் முன்பள்ளியொன்று - யாழ். மாநகரசபையால் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக ஹேமாஸ் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி யூசுவ் அலி கலந்துகொண்டார்.

புதிய முன்பள்ளி கட்டடத்தை மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் நாடாவெட்டி திறந்து வைத்ததோடு, பெயர்ப்பலகையையும் திரைநீக்கம் செய்துவைத்தார். ஹேமாஸ் நிறுவன 'பியவெர' திட்டத்தின் கீழேயே இந்தக் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது.

## இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில்

# தமிழ் மக்கள் அழிக்கப்பட்டபோது மௌனமாக இருந்த இந்தியா அவர்கள் தமது அபிலாசையை வெளிக்கொணர்வதைத் தடுப்பதேன்?

## வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கம் கேள்வி

பல்லாயிரக்கணக்கான தமிழீழ மக்களின் உயிர்கள் அழிக்கப்பட்டபோது, பல இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்து அல்லலுற்றபோது, வாய் பொத்தி மௌனித்திருந்த இந்திய அரசு - தமிழ் மக்கள் தங்கள் அபிலாசைகளை வெளிக்கொணர்ந்தபோது அதனைத் தடுப்பதன் நோக்கம்தான் என்ன? என வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கம் - இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு அனுப்பியுள்ள கடிதத்திலே தெரிவித்துள்ளது. அந்தக் கடிதத்திலே மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த 4 ஆம் திகதி அன்று கொழும்பில் முன்னாள் இந்திய வெளியுறவுக் கொள்கைச் செயலாளர் ராஜ் கோத்ரா உரை நிகழ்த்துகின்றபோது - "தமிழ் மக்களுக்கான இடைக்காலத் திட்டவரைபினை ஏற்றுக்கொள்ள முடியாது " என்ற கருத்தைத் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்தை தமிழ் மக்களாகிய நாம் முற்றாக நிராகரிக்க வேண்டும். என்று கேட்டுக்கொள்கின்றோம்.

ஐம்பது வருடப் போராட்டம் பல திசை திருப்பங்களுடன் இன்று, ஓர் அமைதிச் சூழலை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சூழலூடாக தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் முனைந்து கொண்டிருக்கிறார்கள். இதற்காகவே பல சுற்றுப்பேச்சுக்கள் நடந்தன.

ஈற்றில் எதுவும் பயனற்றுப்போக பேச்சு இடைநிறுத்தப்பட்டு, நிரந்தரத்தீர்வு எட்டும்வரை இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையைப் பெற்றுக்கொள்வது எனத் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் தீர்மானித்ததன்படி, ஓர் திட்ட வரைபினை அரசிற்கு கையளித்தார்கள். இதில் அடங்கியுள்ள விடயங்கள் யாவற்றையும், அரசுடன் பேசித் தீர்வு காணத்தயார் என்றும் தமிழீழ விடுதலைப்புலிகளால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே, இடைக்கால நிர்வாக திட்ட வரைபினை வைத்துக்கொண்டு, இலங்கை அரசில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து நடுநிலை வகித்த நோர்வேயும் வெளியேறியது. இந்த நிலையில் சமாதானச் சூழலின் அடுத்தகட்டநிலை என்ன என்று ஏங்கிக்கொண்டிருக்கும் இந்தவேளையில், எரியும்நெருப்பில் எண்ணை ஊற்றுவதுபோல் இந்த இடைக்கால திட்டவரைபினை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இந்திய அரசால் தெரிவிக்கப்பட்ட கருத்து உள்ளது.

தமிழீழ மக்கள் ஒருபோதும் இந்தியாவைப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. கடந்த காலத்தில் எம்மீது இந்தியப்படைகள் கொலைவெறியாட்டம் ஆடியபோது அதனைத் தடுத்துக்கொண்டோம். அதனைப் பகைமையுணர்வுடன் நினைத்துக்கொண்டு, இன்றுவரை பகைமை பாராட்டுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தங்களது ஆதரவு தேவை என்ற நோக்குடனேயே, விடுதலைப் புலிகள் பேச்சுக்களை ஆரம்பித்தபோது, இந்தியாவில் பேச்சுக்களை நடத்த அனுமதி கோரினார்கள். அதனை மறுத்த இந்திய அரசு, எங்கோ எல்லாம் அலைந்து பேச்சுக்களைப் பேசி இடைக்காலத் தீர்வினைப் பெற்றுக்கொள்ளமுனையும்போது, அதனைத் தடுப்பதற்கான கருத்துக்களை கூறுவதை நாம் முற்றாக வெறுக்கின்றோம். எமது விடுதலைக்காக நாம் போராடுகின்றபோது, உங்களது பூகோள நலன் பாதிக்கப்படுகிறது என்று கூறுவது எவ்வளவு அபத்தமானது.

"தனி ஒருவனுக்கு உணவில்லை என்றால் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்று தங்கள் நாட்டுப் புரட்சிக்கவி கூறியதுபோல் எங்கள் உரிமைக்காகப் போராடும் எங்கள் உயிர்களை மீண்டும் மீண்டும் அழிக்க நினைப்பது எப்படி நியாயமானது. எனவே தங்களது வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றங்களைச் செய்து, எமது உரிமைக்காக உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். என இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கைத்தொழில் அலுவலர் யாழ்ப்பாணம் வருகின்றார்

தொழில் அபிவருத்தி கைத்தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சகத்தைச் சேர்ந்த - சாதாரண மற்றம் மத்தியதர கைத்தொழில் செயற்பட்டாலுவலர் ஆர்.ரணசிங்க இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும், கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் குறித்துப் பார்வையிடவுள்ளதுடன் - இங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கான வேலைத்திட்டங்கள், கைத்தொழில் முயற்சிகளை அறிமுகப்படுத்துவது தொடர்பாகவும் ஆராயும் பொருட்டே இவர் இங்கு வருகின்றார். யாழ்.மாவட்ட வர்த்தக தொழில்துறை மன்றத்தில் நடைபெறும் சந்திப்பிலும் கலந்துகொள்ளவுள்ள அவர், யாழ்.மாவட்டத்திற்கான கைத்தொழில்துறை அபிவிருத்தி தொடர்பாகவும் ஆராயவுள்ளார். (ப)

# 1977 ஆம் ஆண்டு கொலைக் குற்றவாளிகள் மேல்நீதிமன்றத்தால் தண்டனை விதிப்பு

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற கொலையொன்றுடன் தொடர்புடைய குற்றவாளிகள் இருவருக்கு - யாழ். மேல்நீதிமன்றத்தால் கடந்தவாரம் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தெரியவருவதாவது-

1977ம் ஆண்டு காலப்பகுதியில் குருநகரில் வைத்து, கைதாம்பிள்ளை சின்னராசு என்பவரை ஐவர் இணைந்து வாளால் வெட்டிக்கொலைசெய்துள்ளனர். இந்தக் கொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகளான - அந்தோனிராசு, அந்தோனி செல்லத்தம்பி, வேலன் புள்ளியன் செல்லமணி, புள்ளியன் மரகதம், இராசு விஜயன் ஆகியோர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தக் கொலை தொடர்பான வழக்கு விசாரணைகள், கடந்த 15 ஆம் திகதி மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா முன்னிலையில் எடுக்கப்பட்டபோது, முதல் மூன்று குற்றவாளிகளும் இறந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டதோடு மற்றைய இருவரும் மன்றுக்கு ஆஜராகியிருந்தனர்.

குற்றவாளிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு குற்றவாளிகள் தமது குற்றத்தை ஒப்புக்கொள்வதாகவும், அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற ஒரு சம்பவத்திற்காக நீதிமன்றம் அனுப்பிய அழைப்பாணையை மதித்து, மன்றுக்கு சமுகமளித்துள்ளமையையும் மன்றின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

அத்தோடு, இராசு விஜயன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிற்றூழியராகக் கடமைபுரிவதாகவும், புள்ளியன் மரகதம் என்பவர் ஆறு பிள்ளைகளின் தாய் என்பதையும் நீதிவானின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இவற்றை செவிமடுத்த நீதிவான்- இராசு விஜயன் யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவிற்கு பத்தாயிரம் ரூபா தர்மப்பணமாக செலுத்தவேண்டும் எனவும், புள்ளியன் மரகதம் ஆறு மாதகாலப்பகுதிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் காலை 7மணி தொடக்கம் 10 மணிவரை துப்பரவு பணிகளில் ஈடுபடவேண்டுமெனவும் தீர்ப்பளித்தார். (ச)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : அ.பானுகா
முகவரி : அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

நான்காவது அகவையில்



பெயர் : சி.சுகிர்தன்
முகவரி : 1 ஆம் கட்டை வீதி, கிராம்புவில்.

ஐந்தாவது அகவையில்



பெயர் : ஜெ.பிரியங்கா
முகவரி : கிராம்புவில், சாவகச்சேரி.

ஐந்தாவது அகவையில்



பெயர் : ச.அட்சயன்
முகவரி : நீர்வேலி தெற்கு, நீர்வேலி.


# 23 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொலையின் குற்றவாளிக்கு மரணதண்டனை

## யாழ்.மேல்நீதிமன்றத்தால் கடந்தவாரம் தீர்ப்பு

இருபத்தி மூன்று வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொலையொன்றின் குற்றவாளியொருவருக்கு - யாழ். மேன்நீதிமன்றால் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - 1981 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 1 ஆம் திகதியன்று, ராஜா தியேட்டருக்கு அருகாமையில் வைத்து, பிரேமராஜா என்பவரை மூவர் வாளால் வெட்டிக் கொலை செய்திருந்தனர்.

இந்தக் கொலைக்குற்றவாளிகளான - நடேசு யோகராசா (போயா), வேலுப்பிள்ளை கந்தசாமி (வெள்ளையன்), சுப்பிரமணியம் விஜயராசா (விஜயன்) ஆகிய மூவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, வழக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அந்த நிலையில், 1985 ஆம் ஆண்டிற்குபின் யாழ். குடாநாட்டில் நீதிமன்ற நடவடிக்கைகள் யாவும் தடைப்பட்டன.

குடாநாடு இராணுவ கட்டுப்பாட்டிற்கு வந்தபின்னர், நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்தக் கொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகளான மூவரையே முதலாம் மூன்றாம் எதிரிகளான - போயாவும், விஜயனும் இறந்துவிட்டார்கள். இரண்டாம் எதிரியான வெள்ளையன் இதுவரை பொலிஸாரால் கண்டறியப்படவில்லை.

இவரை கைது செய்வதற்குப் பகிரங்க பிடியாணை பிறப்பித்த மேல்நீதிமன்ற நீதிவான்- கே.பி.எஸ். வரதராஜா குற்றாவாளி கைது செய்யப்படும் சந்தர்ப்பத்தில், ஜனாதிபதியால் நிர்ணயிக்கப்படும் ஒரு திகதியில் தூக்கிலிடப்படுவார் எனவும் தீர்ப்பளித்தார். இந்த வழக்கில் அரச தரப்பில் அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமி ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கைத்தொழில் அமைச்சின் ஏற்பாட்டில் கைத்தொழிலாளர்களுக்குப் பயிற்சி

## கலாநிதி ச.கீதபொன்கலன் தகவல்

(யாழ்ப்பாணம்)

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட கைத்தொழிலாளர்களுக்கு - விசேட பயிற்சி வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளதாக, யாழ்.மாவட்ட வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி கலாநிதி ச.கீதபொன்கலன் தெரிவித்தார்.

கைத்தொழில் அபிவிருத்தி அமைசுடன் தொடர்புகொண்டு, யாழ். மக்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளில் யாழ்.மாவட்ட வர்த்தக தொழில்துறைமன்றம் செயற்பட்டு வருவது குறித்துக்கேட்டபோதே அவர் இதனைத்தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது - யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு தென்பகுதியில் இலவச தைத்தொழில் பயிற்சிகளை வழங்கத்திட்டமிட்டுள்ளோம். போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகளையும் அரசாங்கச் செலவில் அவர்களுக்கு வழங்கவுள்ளோம்.

இதற்கான அனுமதிகிடைத்ததும், இங்கிருந்து பல்வேறு தொழில் மற்றும் தொழில்நுட்ப விடயங்களைக் கற்பதற்கும், பயிற்சிபெறுவதற்கும் பலர்எம்மூடாக அனுப்பிவைக்கப்படுவர்.

இதன் முதறகட்டமாக யாழ்.மாவட்டத்தில் உள்ள பேக்கரிதொழிலாளர்கள், மோட்டார்சைக்கிள் மற்றும் வாகனத்திருத்துநர், ஆடைத்தொழிலாளர்கள், காலணித் தொழிலாளர்கள், தோற்பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சித்திட்டம் ஒன்று - எதிர்வரும் ஜனவரி மாதம் 9ஆம், 10ஆம், 11 ஆம் திகதிகளில் யாழில் நடத்தவுள்ளோம்.

கைத்தொழில் அமைச்சின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்த பயிற்சிக்கருத்தரங்குகளில், யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த அனைத்து கைத்தொழில் பணியாளர்களையும் அழைக்கின்றோம்.

தொழில் அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சகத்தைச்சேர்ந்த திறமைவாய்ந்த மூன்று அதிகாரிகள் இந்தப்பயிற்சியை அளிக்கவுள்ளனர்.

இந்தப் பயிற்சியில் பங்குகொள்ள விரும்புவோர் இல.17, செம்மணிவீதி, நல்லூர் என்னும் முகவரியில் உள்ள எமது மன்றத்துடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

எனவும் அவர் மேலும் கேட்டு கொண்டுள்ளார். (ப)

### கலப்பட நல்லெண்ணை கண்டுபிடிப்பு

கலப்படம் செய்யப்பட்ட நல்லெண்ணெய் வகையொன்று பொதுச சுகாதாரப் பரிசோதகர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி நகரப்பகுதியிலுள்ள கடைகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனைகளின்போதே, இந்தக் கலப்பட நல்லெண்ணெய் கண்டறியப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்ததொரு வர்த்தகச் சின்னம் பொறிக்கப்பட்ட நல்லெண்ணெயே, இவ்வாறு கண்டறியப்பட்டுள்ளதாகவும், அதனை விற்பனை செய்வதைத் தவிர்க்கும்படியும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கேட்டுள்ளனர்.

### தடுப்பு மருந்து ஏற்றும் நிகழ்வு

ஜப்பானிய மூளைக்காய்ச்சலுக்கு எதிரான தடுப்பு மருந்தேற்றல் - பல இடங்களிலும் நடைபெறவுள்ளது. பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் வரும் இடங்களில் - தடுப்பூசி மருந்தேற்றல் இடம்பெறவுள்ளதாகச் சுகாதார வைத்திய அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

இன்று வியாழக்கிழமை - வதிரி சிகிச்சை நிலையம், மருதங்கேணி நடமாடும் வைத்தியசாலை, உடுத்துறை பொதுமண்டபம், வெற்றிலைக்கேணி தேவாலயம் ஆகிய இடங்களிலும், எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை - தொண்டமனாறு ஆரம்ப சுகாதார நிலையம், உடுப்பிட்டி சனசமூக நிலையம் என்பவற்றிலும் தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளது. ஒன்றுமுதல் மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு, இந்தத் தடுப்பு மருந்து ஏற்றப்படுவது அவசியமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### 70 ஆவது வயது நிறைவு விழா

நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் 70 ஆவது அகவை நிறைவு விழா நிகழ்வுகள் நாளை நடைபெறவுள்ளன. மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - அமைச்சர் சந்திரசேகரனும், நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசனும் உரையாற்றவுள்ளனர்.

# பூங்கனிச்சோலை ஒரு தனிமனித சாதனை

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

இலங்கையில் பூங்காக்கள், பொழுதுபோக்கு இடங்கள் எனப் பல இருந்தாலும், தனிப்பட்ட ஒருவரால் ஒரு சிறிய இடத்திலே வித்தியாசமான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு, அனைவரும் பயனடையும் வகையில் செயற்படும் ஒரு சோலையாக இந்தப் பூங்கனிச்சோலை செயற்படுகிறது


மூடமாவடி நல்லூரில் அமைந்துள்ளது பூங்கனிச்சோலை. அதனுடைய உரிமையாளர் சி.பக்தகுணசீலனை மாலை 5 மணியளவில் சந்திக்கிறோம். அவருடனான நேர்காணலுக்கு முன்னர்- பூங்கனிச்சோலையைச் சுற்றிப்பார்த்தோம். சிறிய இடத்தில் அனைவரையும் கவரக்கூடியதாக மிகவும் அழகாகவும், நேர்த்தியாகவும் அமைக்கப்பட்டிருந்தது. உண்மையில் பெயருக்கேற்ப மிகவும் பொருத்தமாக கனிந்திருந்தது பூங்கனிச்சோலை.

**பூங்கனிச்சோலை என்ற தெரிவு உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?**

ஆரம்பத்தில் கட்டட ஒப்பந்த வேலைகளில் ஈடுபட்டிருந்தேன். பின்னர் சிமெந்து கிடைப்பது சிரமமாக இருந்தால், கூடுதலாக மரக்கன்றுகள் விற்பனையில் ஈடுபட ஆரம்பித்தேன். 1994 ஆம் ஆண்டிலிருந்து மரக்கன்றுகள் விற்பனை செய்கிறேன். விற்பனையை மேம்படுத்தும் நோக்கிலும், ரசிக்கக் கூடியதாக இருக்கவேண்டும் என்பதற்காகவும் இவ்வாறு படிப்படியாகப் பராமரித்தது - இன்று இந்த நிலைக்கு வளர்ச்சியடைந்துள்ளது. தனியாகத்தான் நான் இதனை நடத்துகிறேன்.


**மரக்கன்றுகள் ஏனைய பொருட்களை எங்கிருந்து பெறுகிறீர்கள்?**


முன்னர் நாங்கள்தான் மரக்கன்றுகளை உற்பத்தி செய்தோம். இப்பொழுது வெளியிடங்களிலிருந்து வரும் மரக்கன்றுகளை வளர்ப்பதைவிட, அவற்றைக் கொள்வனவு செய்வது செலவு குறைவு, கொள்வனவு செய்பவற்றை அப்படியே விற்பனை செய்வதில்லை. எங்களுடைய மண்ணுக்கு ஏற்ற மாதிரி, மாற்றி அமைத்தே விற்பனை செயகிறோம். எங்களுடைய கால நிலைக்கு பொருத்தாத மரக்கன்றுகளை நாம் வேண்டுவதில்லை. அத்துடன் வேண்டிய மரங்களை உடனடியாக விற்பதுமில்லை. வைத்திருந்து பார்த்து, காலநிலைக்குச் சரிவரும் என்றால்தான் விற்பனைக்கு விடுகிறோம். கற்கள், டிசைன் கற்கள் போன்றவையும் செய்கிறோம். கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம், ஆவரங்கால் மண்டபம், பாடசாலைகள், வைத்தியசாலை போன்றவற்றில்



சி.பக்தகுணசீலன்







பூந்தோட்டம் வடிவமைப்பு செய்து கொடுத்துள்ளேன்.

**பராமரிப்பு பற்றிக் கூறுங்கள்?**

பராமரிப்புச் சிரமமாகவுள்ளது. நாளொன்றுக்கு 4000 ரூபா தேவைப்படுகிறது. மத்தியானத்தின்பின், பணியாட்கள் ஒவ்வொரு மூலையிலும் நிற்கவேண்டும். வருபவர்கள் சிலவேளை மரங்களை முறித்துக்கொண்டு போய்விடுவார்கள். முன்பு மரக்கன்று வியாபாரம் குறைவாகவே நடைபெற்றது. இப்பொழுது பரவாயில்லை.

**எந்தெந்தக் காலங்களில் மக்கள் கூடுதலாக வருகிறார்கள்?**

வெயில் காலங்களிலும், பாடசாலை விடுமுறை காலங்களிலும் கூடுதலாக வருகிறார்கள். மழை காலங்களில் குறைவு.

காலை 6.30 மணிக்கு திறந்து - இரவு 9 மணியளவில் மூடுவோம். முன்னர் கட்டணம் அறவிடப்படுவதில்லை. இப்பொழுது ஒன்றரை வருடமாகத்தான் கட்டணம் அறவிடுகிறோம்.

பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் வந்தால் பாதிக்கட்டணம், சிறுவர்களுக்கு கட்டணம் இல்லை. மிருகங்கள், மலையருவி, பூக்கன்றுகளை கூடுதலாக ரசிப்பார்கள். சிறுவர்கள் ராட்டினம், சறுக்கீஸ் போன்றவற்றில் விரும்பி விளையாடுவார்கள். இங்கு சிங்கள, முஸ்லிம் மக்களும் வருகிறார்கள்.

**வங்கிக் கடன் ஏதாவது கிடைக்கிறதா?**

ஆரம்பத்திலிருந்தே என்னுடைய சொந்த முதலில்தான் நடத்துகிறேன். வங்கியில் கடன் எடுப்பதற்கு உறுதிகள் தேவைப்படுகிறது.

**சில மரங்களுக்கு வலை (நெட்) போட்டு வளர்க்கிறார்கள். அதைப் பற்றிக் கூறுங்கள்?**

இந்த வலை வெப்பத்தைக் குறைப்பதற்கு பயன்படுகிறது. 70 வீதமான வெப்பத்தை உள்வாங்கி, 30 வீதமான வெப்பத்தைத் தான் செடிகளுக்கு விடுகிறது. வீட்டுக்குள் வைக்கும் மரங்களுக்கு நல்லது. வெயில் தேவைப்படும் மரங்களுக்கு போடக்கூடாது.

**கூடுதலாக என்ன பசளை பாவிக்கிறீர்கள்?**

இயற்கைப் பசளையான எருவையே பாவிக்கிறோம். செயற்கைப் பசளை பாவிப்பதில்லை. அவற்றைப் பாவிப்பதால் ஆரம்பத்தில் செடிகளின் வளர்ச்சி வேகமாக இருக்கும். பின்னர் தொடர்ந்து பாவிக்க வேண்டும், இதனால் மண்வளம் குறைந்துவிடும். மரக்கன்றுகள் சிறிதாக இருக்கும் பொழுது மட்டும், சிறிய செயற்கைப் பசளை உருண்டை ஒன்று பாவிப்போம் புற்களுக்குக் கூட பசளை போடுவதில்லை. தண்ணீர மட்டுமே பாவிக்கிறோம்.

**இங்கு வருபவர்களின் அபிப்பிராயம் பற்றிக் கூறுங்கள்?**

ஆரம்பத்தில் குறிப்புப் புத்தகம் வைத்திருந்தேன். அதனைக் கருத்தில் கொண்டே இவ்வாறு உருவாக்கினேன். இவ்வாறான சிறிய இடத்தில் தனிப்பட்ட ஒருவர், இப்படியொரு சோலையை நடத்தவில்லை என்று சிங்கள மக்கள் கூறுகிறார்கள்.

இனிப் பெருப்பிப்பதற்கு இடம் இல்லை. வேறு ஒரு இடத்தில் மரக்கன்று நேர்சரி வைப்பதற்கு தீர்மானித்துள்ளோம் எனக் கூறி முடித்தார்.

இலங்கையில் - பூங்காக்கள் பொழுதுபோக்கு இடங்கள் எனப் பல இருந்தாலும், தனிப்பட்ட ஒருவரால் ஒரு சிறிய இடத்திலே வித்தியாசமான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு, அனைவரும் பயன் அடையும் வகையில் செயற்படும் ஒரு சோலையாக இந்தப் பூங்கனிச்சோலை செயற்படுகிறது.

அத்துடன், இலங்கையில் தனிப்பட்ட ஒருவர் இவ்வாறான ஒரு முயற்சியை சிறியதொரு இடத்தில் இதுவரை நடத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

நேர்காணல் -
விக்கி
இரா.சுபோதினி

# கோழிகளின் நோய்களும் தடுக்கும் முறைகளும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

இந்த நோயை வராமல் தடுப்பதற்கு- தடுப்பு மருந்து குஞ்சில் 14 ஆம் நாள், பின் 35 ஆம் நாள் கொடுக்கவேண்டும். இந்த அட்டவணையில் அந்த அந்தப் பகுதியில் நோயின் தாக்கத்திற்கு ஏற்ப மாற்றம் ஏற்படலாம்.

உங்கள் பகுதி கால்நடைவைத்தியரை சந்தித்து, தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

**3. வைரஸால் ஏற்படும் முக்கிய நோய் - கோழி அம்மை**

இந்த நோய் எந்த வயதுக் கோழிகளையும் தாக்கக்கூடியது. குஞ்சுப்பருவத்தில் இந்த நோய் ஏற்பட்டால், குஞ்சுகள் இறக்க நேரிடும். பெரிய கோழிகளில் இந்த நோய் ஏற்பட்டால் முட்டை உற்பத்தி வீழ்ச்சி அடைந்துவிடும். இறப்பும் ஏற்படலாம்.

**நோயின் அறிகுறி -**

தலையில் உள்ள பூ, கண் இமை, தாடை சொண்டுப் பகுதிகளில் கறுத்தப் புள்ளிகள் போல் கொப்புழங்கள் ஏற்படும். நோய் எற்பட்ட குஞ்சுகள், கோழிகள் உணவு அருந்தாது. ஒதுங்கிநிற்கும். குஞ்சுகளாயின் இறப்பு ஏற்படும்.

நோயின் தாக்கத்தைக் குறைப்பதற்கு, கோழிகளில் ஏற்பட்ட கொப்புழங்களுக்கு அயோடின் என்ற மருந்தைப் பூசலாம். விட்டா ஸ்ரெஸ் CTC என்ற மருந்துகளை தண்ணீருடன் கலந்து 3-4 நாட்களுக்கு வைத்தல் வேண்டும்.

**4. அம்மை நோய் வராது தடுத்தல்**

அம்மைத் தடுப்புமருந்தினை 1 ஆம் மாதத்திலும் 4 ஆம் மாதத்திலும் ஏற்ற வேண்டும்.

**5. சளி வருத்தம்.**

இந்நோய்பலவகைக் கிருமிகளால் ஏற்பட்டு, சுவாசத்தொகுதியைத் தாக்கும். இதற்கு முக்கிய காரணிகள் வைரஸ்சும், பற்றிரீயாக்களுமாகும்.

**நோயின் அறிகுறிகள்.**

மூக்கினால் சளி வடியும், கோழிகள் சுவாசிக்கக் கஸ்டப்பட்டு, வாயை 'ஆ' என்று திறந்தே சுவாசிக்கும். உணவு அருந்துவது குறைவடையும், உற்பத்தி விழ்ச்சியடையும் (முட்டை, இறைச்சி) நோய்த் தாக்கம் அதிகரிக்கும்போது, இறக்கவும் நேரிடும். இறந்த கோழியை மரணபரிசேதனைக்கு உட்படுத்தினால் - சுவாசத் தொகுதியில் சளி காணப்படும்.

சுவாசப்பை சிவந்து நுரை நிரம்பியதாகக் காணப்படும். நோய் அறிகுறி கண்டவுடன், கால்நடை வைத்தியரின் ஆலோசனையுடன், தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டால் அதிக இறப்பு, ஏற்படுவதைத் தடுக்கலாம்.

சுவாசத் தொகுதியைத் தாக்கும் சில நோய்களுக்கு தடுப்பு மருந்துகள் உண்டு இதனை குஞ்சு பொரித்த முதலாம் மாதம் கொடுக்கவேண்டும்.

**6. கொக்சீடியோசிஸ் - இரத்தக் கழிச்சல்**

இந்நோய், 'ஐமீரியா' என்ற கிருமியால் ஏற்படுகின்றது. இதில் பல வகைகள் உண்டு எந்தவயதுக் கோழிகளையும் இந்தக் கிருமி தாக்கக்கூடியது. கோழிகளில் இந்த நோயால் தாக்கப்படும் பகுதிகள்- சிறு குடல், பெருங்குடல் தொகுதிகளேயாகும்.

இந்த நோய் ஏற்பட்ட கோழிகள் ஒதுங்கி, ஒட்டி நிற்கும், இரத்தக் கழிச்சல் அல்லது மண்ணிறம் கலந்த சிவப்பு நிறத்தில் மலம் கழிக்கும். (தொடரும்...)

Dr.M.தங்கராஜா B.V.Sc.mse (SL)
அத்தியட்சகர், கால்நடை வைத்தியசாலை
யாழ்ப்பாணம்

# வெங்காயச் செய்கையைத் தாக்கும் கசுக்குட்டா ஒட்டுண்ணித் தாவரம்

யாழ். மாவட்ட தீவுப்பகுதியில் அண்மைக்காலமாக வெங்காயம், மிளகாய்ப் பயிர்களுக்கு - கசுக்குட்டா என்னும் தாவர ஒட்டுண்ணியின் தாக்கம் அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்கம் கடந்த போகங்களில் ஓரளவில் காணப்பட்டது. ஆனால், இம்முறை பல தோட்டங்களில் பரவலாகக் காணப்படுகின்றது.

குறிப்பாக - புளியங்கூடல், நாரந்தனை தெற்கு, சின்னமடு போன்ற பகுதிகளிலும், இவற்றை அண்டிய பிரதேசங்களிலும் வேகமாகப்பரவி வருகின்றது. தற்போது இந்த நோயின் தாக்கத்தை வெங்காயப் பயிர்களில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

**இந்த ஒட்டுண்ணித் தாவரத்தின் அறிகுறி**

மஞ்சள்நிற மெல்லிய கொடிகள் பயிர்களைச்சுற்றிக் காணப்படும். கூடிய தாக்கத்தின்போது, பயிர்கள் முழுவதும் இந்தக் கொடியால் மூடிக்காணப்படும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு, விவசாயிகள் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முக்கியமாக பயிர்கள் நாட்டிய பின்பே, இந்த ஒட்டுண்ணித் தாவரம் முளைத்துப் பயிர்களுடன் ஒன்றி வாழ்வதனால், களைநாசினிகள் எதனையும் பாவிக்கமுடியாதுள்ளது.

- கசுக்குட்டா தாவரங்களைப் பூக்கமுன் அகற்றி எரிக்கவும்.
- கசுக்குட்டா தாவரம் உள்ள வயல்களுக்கு ஊடாக நீர்ப்பாசனம் செய்வதைத் தவிர்க்கவும்:
- கசுக்குட்டா தாவரம் உள்ள தோட்டங்களில் கால்நடைகள் மேய்வதைத் தவிர்க்கவும்.
- கசுக்குட்டா காணப்படும் விருந்து வழங்கித் தாவரங்களை அகற்றி எரிக்கவும்.
- தோட்டங்களையும், நீர்ப்பாசன வாய்க்கால்களையும் களைகள் இன்றிச் சுத்தமாக வைத்திருக்கவும்.
- கசுக்குட்டா எதிர்ப்புத் தாவரங்களான சோளம், கௌபி போன்ற பயிர்களை - எல்லைப் பயிர்களாக நடுகை செய்யவும்.

☞ **மேலதிக விபரங்களுக்கு தங்கள் பகுதி (வேலணை) விவசாயப் போதனாசிரியருடன் தொடர்புகொள்ளுமாறு விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.**

சி.சின்னத்துரை விவசாயப் பணிப்பாளர் (விஸ்தரிப்பு) யாழ்ப்பாணம்

# பயன்தரும் மாதுளைச் செய்கை


புனிக்கேசியே எனும் தாவரக் குடும்பத்தைச் சேர்ந்த மாதுளையானது - எமது பிரதேசத்தில் குறிப்பாக வீட்டுத்தோட்டங்களில், பழப்பயிராக மட்டுமல்லாது மருத்துவ தாவரமாகவும் வளர்க்கப்படுகிறது.

இப்பழத்தின் சிறப்பியல்புகளின் காரணமாக - குறிப்பிட்டத்தக்க அளவு கிராக்கி நிலவுகிறது. எனவே, இதன் பயிரச்செய்கைப பரப்பளவை விஸ்தரிப்பதற்கும், விளைச்சலின் தரத்தை விருத்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியமாகும.

மாதுளம் பழத்தின் உண்ணக்கூடிய பகுதியின் 100 கிராமில் அடங்கியுள்ள போசனைப் பதார்த்தங்கள்:-

நீர் - 48 கிராம்
சக்தி - 65 கிலோ கலோரி
புரதம் - 1.6 கிராம்
கொழுப்பு - 0.1 கிராம்
காபோவைதரேற்று - 14.5 கிராம்
கல்சியம் - 10 மில்லிகிராம்
பொசுபரசு - 70 மில்லிகிராம் இவற்றுடன் இன்னும் பல விற்றமின்கள் கனியுப்புக்களும் அடங்கியுள்ளன.

பழங்களின் விதைகளைச் சுற்றியுள்ள சதைப்பகுதியை நேரடியாக உண்ணவும், இல்லாவிடின், அவற்றை பிழிந்து இனிப்பான பழச்சாற்றை தயாரிக்க முடியும். இம் மாதுளம் சாற்றிலிருந்து தயாரிக்கப்படும்.



கிரேனடின் எனும கலவை, ஜெலி தயாரிப்பதற்கும், மதுரசங்களுடன் கலப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

**மாதுளையிலுள்ள மருத்துவங்கள்:-**

மாதுளை மரத்தின் எல்லாப் பாகங்களிலும் மருத்துவகுணங்கள் உள்ளதாக கருதப்படுகிறது. மதுபானம், பழச்சாறு அஜீரணத்தை போக்கவும், தொழுநோயை சுகப்படுத்தவும் பயன்படுகிறது.

மரத்தின் பட்டை, இலை, இளம் காய்கள், முதிர்ச்சியடைந்த காய்களின் தோல் என்பவற்றில் தனின் என்ற இரசாயன பொருள் அடங்கியுள்ளது. எனவே, இது வயிற்றோட்டம், உடம்பிலுள்ளே குருதி வடிதல் ஆகியவற்றை சுகப் படுத்தவல்லது.

இவற்றுடன் தனின் அடங்கயுள்ள மாதுளை மரப்பட்டை, தோலைப் பதனிட்டுப் பயன்படுத்தப்படுகிறது.

துணிகளுக்கு நிறமூட்டுவதற்கு - முதிர்ச்சியடைந்த காய்களின் தோல், பூக்கள் என்பன பயன்படுகின்றன.

இலங்கையில் பலவேறு பிரதேசங்களிலும் செய்கை பண்ணுவதற்குப் பொருத்தமான, மிகச்சிறந்த மாதுளை வர்க்கங்கள் இதுவரை அறியப்படவிலலை. ஆனால், தரமான பழங்கள் தோன்றும் மரங்களிலிருந்து தேவையான நாற்றுக்களை பெறுவது சிறந்ததாகும்.

நடுகைப்பொருட்களை தயார்செய்தல்.

**விதை நாற்றுகள்:-**

தெரிவு செய்யப்பட்ட விதைகளை நாற்று மேடையில் விதைக்கும்பேரது, அவை இலகுவில முளைக்கும். 9 - 12 மாதங்களின் பினபு அவற்றை நாற்று நடுகைக்கு பயன்படுத்தலாம். முளைக்கும் எல்லா நாற்றுக்களும் பொதுவாக ஒரே இயல்பை கொண்டிருக்காது.

**வேர் விட்ட துண்டங்கள்:-**

தரமான இயல்புகளைக்கொண்ட தாய் மரத்திலிருந்து, 1செ.மீ தடிப்புடைய முற்றிய வெட்டுத் துண்டங்களை தெரிவு செய்யவும். அத்துண்டுகளை 20 - 30 செ.மீ நீளமானதாக வெட்டவும்.

அத்தண்டின் 2/3 பகுதி மண்ணில் தாழக் கூடியவாறு, தயார் செய்யப்பட்ட பாத்திகளில் நடுகை செய்யவும் இவை முளைத்து, ஒருவருடத்தின் பின்னர் இவற்றை தோட்டத்தில் நாட்டமுடியும்.

**காற்றுப்பதியம்**

காற்று பதியம் மூலமும் வெற்றிகரமாக நாற்றுக்களை உற்பத்திசெய்ய முடியுமாயினும், அதிகளவான நாற்றுக்களை பெற இது சாத்தியமற்ற முறையாகும்.

**நாற்றுக்களை நடல்**

3x3 மீற். அடைவெளியில் 60x60x60செ.மீ அளவுள்ள குழிகளைத் தோண்டவும். மேல் மண், நன்கு உக்கிய சாணம் ஆகியவற்றை இட்டு குழிகளை நிரப்புவும் இதன் பின்னர் நாற்றுக்களை நடவும்.

**பசளை இடல்**

வளர்ச்சியின் ஆரம்பத்தில் நன்கு உக்கிய சேதனப் பசளைகளை மரத்தைச்சுற்றி இட்டு, மண்ணுடன் நன்கு கலந்துவிடவும்.

நாற்று நட்டு ஒரு வருடத்தின் பின் மரததை சுற்றி வட்டமாக மண்ணை அகற்றி, (1 - 11/2 மீ) அகற்றிய பிரதேசத்தில் நன்கு உக்கிய சேதனப்பசளை அல்லது மாட்டுச் சாணம் இட்டு மீண்டும் மண்ணால் மூடவும். மழை காலத்தில் இவை செய்வது விரும்பத்தக்கது.

வளம் குறைந்த மண் எனின் மாட்டெருவுடன் 100 - 150 கிராம் யூரியாவை ஒவ்வொரு மரத்திற்கும் இடவும்.

**களைகளை கட்டுப்படுத்தல்**

உலர் புற்களைப் பயன்படுத்திப் பத்திரக்கலவை இடுவதன்மூலம், மரத்தைச் சுற்றியுள்ள பகுதியில் களைகளைக் கட்டுப் படுத்தலாம்.

**பீடைகளை கட்டுப்படுத்தல்**

நரைநிறம் கலந்த ஊதா நிறமான, மாதுளை வண்ணத்துப்பூச்சியே இன்று மாதுளைச் செய்கையின் பெரும் எதிரியாகியுள்ளது.

வண்ணத்துப் பூச்சியானது - பூ அரும்புகளிலும், இளம் காய்களின் கீழ்ப் பகுதியிலும் முட்டையிடும். முட்டையிலிருந்து வெளிவரும் குடம்பியே காயினுட் சென்று, பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே, இப்பழங்களைப் பயன்படுத்தமுடியாது.

இந்தப் பூச்சித்தாக்கத்தைக் கட்டுப் படுத்த இரசாயனங்களை விசிறமுடியாது. ஏனெனில், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மரத்தில் பல வளர்ச்சி அவத்தைகளில் உள்ள காய்கள் காணப்படும்.

காய்களின் இளம் பருவத்தில் அவற்றைக் கடதாசி போன்றவற்றால் உறையிடுவதன்மூலம், இந்தத் தாக்கத்தைக் கட்டுப் படுத்தமுடியும்.

இதைத்தவிர தண்டு துளைப்பானின் தாககம் ஏற்படும்போது, நுனியிலிருந்து கிளைகள் இறப்பதற்கு இடமுண்டு.

வெண் ஈ, வெண்மூட்டுப்பூச்சி, செதிற் பூச்சி ஆகியவற்றாலும், பயிர் அதிகளவு பாதிக்கப்படலாம். உலர்காலத்தில் கறையானின் தாக்கத்தினால் தண்டுக்குச்சேதம் ஏற்படலாம். இதனைக் கட்டுப்படுத்த 'என்ஜின ஒயில்' போன்றவற்றைத் தண்டின் அடிப் பகுதியில் பூசவும்.

**அறுவடை**

மாதுளையில் வருடம் முழுவதும் பூக்கள் தோன்றும். பூக்கள் பூத்து 6-7 மாதங்களின் பின் அறுவடை செய்யமுடியும்.

அறுவடை செய்வதற்குப் பொருத்தமான பருவத்தை அடைந்துள்ளதா என்பதை அறிந்துகொள்ள - காய்களைச் சுண்டிப் பார்க்கவும். இதனால், ஏற்படும் விசேடசத்தத்தின் மூலம் முதிர்ச்சியடைந்த காய்களை இலகுவாக அறிந்துகொள்ள முடியும்.

அறுவடை செய்தபின் காய்களை பழுக்க வைக்கமுடியாது. எனவே, அறுவடை செய்யும்போது முதிர்ச்சி முக்கியமானதாகும்.

எஸ். சுமித்திரா
தகவல் தொடர்பு மையம்
(மாணவர் பகுதி) விவசாயபீடம்.

# வாரம் ஒரு சிறுதொழில்

## காகிதக்கூழ் பொம்மைகள் செய்யும் முறைகள்



(சென்றவாரத் தொடர்ச்சி...)

காகிதக்கூழைக் கொண்டு விதவிதமான பொம்மைகளைச் செய்து விற்பனை செய்யலாம்.

காகிதக்கூழ் பொம்மைகளை இரண்டு விதத்தில் செய்யலாம். ஒவ்வொரு பொம்மையாகத் தனித்தனியாக தயார் செய்வது ஒருவகை, இதற்கு ஓரளவாவது பொம்மைகளைச் செய்வதற்கான பயிற்சி இருக்கவேண்டும்.

காகிதக்கூழைக் காயவைத்து, களிமண் அல்லது மெழுகு போன்ற பக்குவநிலைக்கு உள்ளாக்கி, விதவிதமான பொம்மைகளை உருவாக்கலாம்.

மற்றயது - அச்சுக்களைப் பயன்படுத்தி பொம்மைகளைத் தயாரித்தல் - இதற்கு அச்சுகளை வடிவமைக்கவேண்டியிருக்கும். அச்சுகளை மரத்திலோ, உலோகத்திலோ தயார்செய்யலாம்.நல்ல களிமண்ணைக் கொண்டும் அச்சைத் தயார் செய்து கொள்ளலாம். பொம்மை உருவில் களிமண்ணை ஒரு சமதளத்தில் சமப்படுத்தவேண்டும். பின்னர், நாம் எந்தப் பொம்மையைத் தயார் செய்ய விரும்புகின்றோமோ, அந்தப் பொம்மையின் முன்புறப் பாதியைச் சமப்படுத்தி வைத்திருக்கும் கணிமண்ணில் வைத்து அழுத்தவேண்டும். பொம்மையின் பாதியளவு களிமண்ணில் பதித்தால்போதும்.

பின்பு பொம்மையை எடுத்துவிடவேண்டும். இதேபோன்றே பொம்மையின் மறுபுறத்தையும் அமைக்க வேண்டும். பின் காகிதக்கூழை பொம்மை அச்சில்விட்டு அழுத்தமாகப் பதியுமாறு பூசவேண்டும். காகிதக்கூழ் குழம்பை அச்சில் பூசுவதற்கு முன்னர், அச்சில் உட்புறத்தில் சிறிதளவு விளக்கெண்ணெய் தடவிக்கொள்வது நல்லது.

இரண்டு, மூன்று நாட்கள் அச்சுகளை வெயிலில் காயவைக்கவேண்டும். பின்னர், அச்சிலிருந்து எடுத்து, பொம்மையின் இரண்டு பக்கங்களையும் காகிதக்கூழ்கொண்டு ஒட்டவைக்கவேண்டும். பின் வெயிலில் காயவைத்து, ஏற்பட்ட உடைசல்களை காகிதக் கூழ்மூலம் ஒட்டவைத்த பின்னர் காயவிடவேண்டும். நன்கு காய்ந்த பின்னர் விற்பனை செய்யலாம்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்



| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 80/= | 70/= | 60/= | 100/= | 60/= | 60/= |
| வெண்டிக்காய் | 30/= | 25/= | 35/= | 20/= | 40/= | 20/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 80/= | 85/= | 65/= | 65/= | 80/= | 70/= | 70/= |
| கத்தரிக்காய் | 70/= | 80/= | 75/= | 65/= | 120/= | 70/= | 80/= |
| பாகற்காய் | 80/= | 100/= | 100/= | 60/= | 70/= | 75/= | 80/= |
| கரட் | 40/= | 60/= | 60/= | 50/= | 60/= | 40/= | 80/= |
| பீற்றூட் | 30/= | - | - | - | 50/= | 30/= | 60/= |
| முருங்கைக்காய் | - | - | - | - | 120/= | - | - |
| வெங்காயம் | 45/= | 50/= | 55/= | 40/= | 60= | 45/= | 60/= |
| பச்சை மிளகாய் | 80/= | 50/= | 75/= | 60/= | 120/= | 70/= | 80/= |

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.

திருக்குறள்.

## நமது நோக்கு

### சந்திரிகாவின் தந்திரம் வெல்லுமா?

சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் போர்க் கோலம்பூணத் தொடங்குகின்றார் போலுள்ளது.

முப்படைகளையும் வலுப்படுத்தி நவீனமயப்படுத்த புதிய மூலோபாயத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் வேகம் காட்டத் தொடங்கியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சைத் தன்வசம் பொறுப்பேற்றது முதலே, அவர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் யாவும் சமாதானம் குறித்த நம்பிக்கைகளை ஒவ்வொன்றாக சிதைத்தே வருகிறது.

நாட்டின் பாதுகாப்பு - அச்சுறுத்தலுக்கு உள்ளாகி விட்டது. ஐக்கிய தேசிய முன்னணி அரசின் செயற்பாடுகள் சட்டம், ஒழுங்கு நிலைமைகளை கேள்விக்குறியாக்கிவிட்டது என்றெல்லாம் ரணிலின் ஆட்சியைக் குறைகூறிக்கொண்டு தனது அதிகார வலுவைப்பயன்படுத்தி, ரணிலின் தலைமையிலான நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை முக்கியத்துவம் அற்றதாகச் செய்யும் நடவடிக்கைகளை சந்திரிகா மேற்கொள்ளத்தொடங்கிய போதே, அவரது முன்னைய ஆட்சிக்காலம் மீண்டும் ஆரம்பமாகிவிட்டது எனலாம்.

பெயருக்கு பிரதமராக ரணில் இருந்தாலும்கூட அவரையோ, அவரது அரசையோ, அமைச்சர்களையோ ஜனாதிபதி சந்திரிகா எந்த வகையிலும் கணித்ததுமில்லை, மதித்ததுமில்லை. மாறாக தன்னால் எந்த வேளையும் தூக்கி எறியக் கூடிய ஒரு பொம்மைக் கூட்டமாகவே கருதியதுடன், அந்தத் தொனியுடன் கூடிய வார்த்தைகளைக் கொண்டதான பேச்சுக்களாலும், அறிக்கைகளாலும் பிரதமரையும், அரசையும் அச்சுறுத்தி வந்துமுள்ளார்.

ரணில் அரசும், அவரின் அரசுக்கு வழங்கிய அதிகாரங்களும், கொடுத்த அமைச்சர் பதவிகளும், தன்னால் வழங்கப்பட்ட பிச்சையாகவே சந்திரிகா தனது செயற்பாடுகள் மூலம் இனம் காட்டமுயன்றும் வந்தார்.

மக்களின் ஆதரவுப் பலத்துடன் ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியைத் தேர்தலில் தோற்கடித்து, நாடாளுமன்றத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த ரணில் விக்கிரமசிங்கவை தனது ஆட்சியில் பகையாளியாகவே கருதினாரேயன்றி, ஆட்சியின் பங்காளியாக மதித்ததேயில்லை.

தான் ஒரு அதிகார வலுவற்ற - தனக்கான அதிகாரங்களுக்கு ஜனாதிபதியைக் கையேந்திநிற்க வேண்டிய நிலையில் உள்ள பிரதமர் - தான் என்பதை ரணில் தெளிவாகவே உணர்ந்திருந்தபோதிலும், மக்களின் ஆதரவானது சமாதானத்தின் உத்தரவாதத்தின் பேரில் தனக்கு வலுவாக இருக்கிறதென்றே ரணில் நம்பினார். இப்போதும் நம்பிக்கொண்டிருக்கின்றார்.

சந்திரிகாவோ இதற்கு மாறாக ரணிலுக்கான மக்களின் ஆதரவு பலத்தைவிட, தன்னிடமுள்ள நிறைவேற்று அதிகார பலம் மிக மிக வலுவானது என்றே கருதுவதால் அவர் ரணிலை, அதாவது நாட்டின் பிரதமரை ஒருபோதுமே ஒரு பொருட்டாகக் கருதியதில்லை என்பதற்கு, கடந்த காலத்தில் நடைபெற்ற பல நிகழ்வுகளே சான்றாகும். இதில் உச்சக்கட்டமான நிகழ்வே ரணில் வெளியூரில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தபோது, அவரது அரசாங்கத்தின் அமைச்சுக்களை எந்த விதமான கேட்டுக்கேள்வியுமின்றி, பறித்து அவமதித்தமையாகும்.

இது ரணிலை பிரதமர் பதவியில் இருந்தும் தன்னால் தூக்கியெறிய முடியுமென அவரை மிரட்டியதற்குகொப்பானதாகும்.

தன்மானமுள்ள, பொறுப்புள்ள, மக்கள் ஆதரவைக்கொண்ட ஒரு அரசியல் தலைவரால் இந்த ஜனநாயக விரோத, அராஜக அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையை எந்த வகை யிலும் ஏற்றுக்கொள்ளவே முடியாது.

ஆனாலும், ரணில் இந்த விடயத்தில் காட்டிய நிதானமும், பொறுமையும் ஒரு நுட்பமான ராஜதந்திர நகர்வின் பாற்பட்டதாகும்.

இந்த நிதானம் அவருக்கான சர்வதேச சமாதான சமூகத்தின ஆதரவன் பலத்தையும், உள்ளூர் அமைதியை நேசிக்கும் மக்களினது ஆதரவையும் அதிகரிக்கவே வைத்தது. இது சந்திரிகா எதிர்பார்க்காத ஒன்றாகும்.

எனவே, இப்போது தனது அதிரடி செயற்பாட்டிற்கான நியாயப்படுத்தலை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் சந்திரிகா இறங்கியுள்ளார். இது அவருக்குதேவையான ஒரு அரசியல் அவசியமாகவுமுள்ளது.


இந்த வகையில் அவர் நாட்டின் பாதுகாப்பின் மீதான தனது அக்கறையை நிரூபிக்கத் தேவையான சம்பவங்களைத் திட்டமிட்டு நிகழ்த்திக்காட்ட முனைந்துள்ளார்.

முபபடைகளைப் பலப்படுத்துதல், அவர்களுக்கான இராணுவ ஆயுதத்தளபாடங்களை நவீன தரத்தில் கொள்வனவு செய்தல், அதிரடிப்படையை விஸ்தரித்தல், இராணுவ கொமாண்டோ படைக்கு விசேட பயிற்சி அளித்தல், இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்பாடொன்றை மேற்கொள்ளல், புலானாய்வு பரிமாற்றங்களைச் செய்ய உடன்பாடு காணல், பலாலி விமானத்தளத்தை சீரமைத்தல்... எனப்பாதுகாப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகளை பரபரப்புடன் மேற்கொள்வதன் மூலம் - நாடு ஒரு பாதுகாப்பு ரீதியிலான அச்சுறுத்தலை எதிர்கொள்ளவேண்டியுள்ளது என்ற தோற்றத்தை - தேசிய, சர்வதேசிய ரீதியில் உருவாக்க முனைந்துள்ள சந்திரிகா, நானூறு தற்கொலைப் போராளிகள் தலைநகரில் ஊடுருவியுள்ளார்கள் என்ற ஆதாரமற்ற அபாய அறிவிப்பொன்றையும் விடுத்துள்ளார்.

தன்னால் சமாதானத்தை தொடர முடியாததுடன் தேர்தலையும் எதிர்கொள்ள முடியாத நிலையில், பாதுகாப்பு என்ற பெயரில் பதற்றநிலையை ஏற்படுத்தி, போர்ச்சூழலை உருவாக்கி அதன் மூலம் தனக்கு ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியில் இருந்து மீளமுயல்கிறார் என்றே தோன்றுகின்றது. அத்துடன் சமாதானம் தொடர்பான நம்பிக்கைகளில் இருந்து மக்களைத் திசைதிருப்பி, சர்வதேச அழுத்தங்களில் இருந்து, தன் செயற்பாடுகளுக்கு நியாயம் கற்பித்து தப்பவும் முயலுகிறார் என்றும் கருதமுடிகின்றது.

சந்திரிகாவின் தந்திரம் வெல்லுமா? தோற்குமா? அடுத்து வரும் வாரங்களில் தெரியக்கூடும்.

## நாடும் நடப்பும்




# 9 முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் தமது பட்டியலில் போட்டியிடுவராம்!

## மங்கள சமரவீர கூறுகிறார்

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் அடுத்த சில நாட்களுக்குள் கூட்டு முன்னணி உடன்படிக்கையில் கைச்சாத்திடும்.

இவ்வாறு சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கண்டி மயாவயில் நடைபெற்ற சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களின் கூட்டமொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றும்போது தெரிவித்ததாவது,

இந்தக் கூட்டு முன்னணிக்கு தமிழ் அரசியல் கட்சி களில் ஒத்துழைப்பை பெறுவதற்கென ஈ. பி. டி. பி., புளொட், ஈ.பி. ஆர். எல். எப். ஆகிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசில் போட்டியிட்டு தெரிவாகியுள்ள 12 எம்.பிக்களில், 9 பேர் - அடுத்த பொதுத் தேர்தலில் எமது பொதுப்பட்டியலில் போட்டியிடுவார்கள் என, சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் மாத்தறை மாவட்ட எம்.பி. யுமான மங்கள சமரவீர தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பொதுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை. ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு, பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவார் என்ற அச்சம் காரணமாகவே வரவு-செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டது.

எமது ஆட்சிக் காலத்தில் கிழக்கு மாகாண மக்கள் சுதந்திரமாக வாழ்ந்தனர். இன்று அவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை என்ன? பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றது குறித்து ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் விமர்சனம் செய்து வருகிறது. பாதுகாப்பு அமைச்சு குறித்து ஜனாதிபதி கடந்த இரண்டு வருடங்களாக மௌனம் சாதித்தார். பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்கும்படி நாம் அவரை பலமுறை வலியுறுத்தியும் அவர் அந்த முடிவை எடுக்கவில்லை. நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் எற்பட்ட பின்னரே அவர் பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்றுக்கொண்டார் எனத் தெரிவித்தார்

# பிறப்புச் சான்றிதழ்களை ஆவணப்படுத்த யு.என்.எச்.சி.ஆர், யுனிசெப் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களது நலனைக் கருத்திற்கொண்டுஅவர்களுடைய பிறப்புச் சான்றிதழ்களை ஆவணப்படுத்துவதற்கும், விரைவாகப் பெற்றுக்கொடுப்பதற்குமான நிதியுதவியினை யூ.என்.எச்.சி.ஆர், யுனிசெப் நிறுவனங்கள் இணைந்து வழங்கியுள்ளதாக மேலதிக மாவட்டப் பதிவாளர் பொ. ஈஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர்களது கல்வி நடவடிக்கைகளுக்கு பிறப்புச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கும், அவர்களது பெற்றோர்களது பிறப்பு, இறப்புச்சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதில் ஏற்படும் தாமதங்களை தவிர்க்கும் நோக்குடனும் இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பிறப்பு, இறப்பு, மற்றும் திருமணப் பதிவுச் சான்றிதழ்களை ஆவணப்படுத்திவைப்பதற்கு என 30 இறாக்கைகளை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (07)

# அடுத்த வருட முற்பகுதியில் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்

## டிரோன் பெர்னாண்டோ தெரிவிப்பு

இந்தியாவுடன் அடுத்த வருட முற்பகுதியில் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றுசெய்துகொள்ளப்படும் என்று வெளிநாட்டு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

பாதுகாப்பு விடயங்களை உறுதிபபடுத்திக் கொள்வதற்காக அண்மையில் பிரதமமந்திரி இந்தியாவிற்குச் விஜயம் செய்திருந்தார். அந்த நாட்டின் பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இதனடிப்படையில் பலாலி வான்படைத்தளத்தை புனரமைப்பதற்கு - இந்தியா உதவியளிக்கும் என்று கூறியிருப்பதாக தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையின் பாதுகாப்பு விடயங்களிலும் இந்தியா-இலங்கைக்கு உதவியளிக்கும் என்றும் கூறியிருக்கின்றார்.

இதேவேளை, அமெரிக்காவும் இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகளில் உதவி அளிப்பதாகவும் கூறியிருப்பதாகவும் பெர்னாண்டோ தெரிவித்தார். (01)

# வற் வரியால் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது

## மின்சாரசபைத் தலைவர் தெரிவிப்பு

மின்சாரக் கட்டணங்கள் உயரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக மின்சாரசபைத் தலைவர் 'சுபைதி' தெரிவித்தார்.

அண்மையில் 'வற்' என்னும் பெறுமதி சேர்ந்த வரி அறவிடப்படுவதால் இதற்கான வாய்ப்பு அதிகரித்திருப்பதாகவும். இது தொடர்பாக தற்போது ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே சுமார் 30 லட்சம் குடும்பங்களிற்கு ஆகக் குறைந்த கட்டணமாக 3 ரூபாவே அறவிடப்பட்டுவந்தது. குறைந்தளவு மின்சார அலகுகளைப் பாவிக்கும் குடும்பங்களுக்கே இவ்வாறான சலுகை வழங்கப்பட்டு வந்தது. இவர்களிற்கான இந்த அறவீட்டினால் அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தினை திறைசேரியே தாங்கி வந்தது.

தற்போது 'வற்' வரி 10 வீதத்தில் இருந்து 15 வீதத்திற்கு அதிகரிக்கப்பட்ட காரணத்தினால் இந்த மூன்று ரூபா கட்டணம் மேலும் அதிகரிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக இன்னமும் முடிவுகள் எடுக்கப்படவில்லை என்றும், முடிவுகள் எடுக்கப்பட்ட பின்னர் மக்களுக்கு இவை தெரியப்படுத்தப்படும் என்றும் மின்சாரசபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடுமுழுவதும் மின்சாரம் சீரற்றநிலை காணப்பட்டமை தொடர்பாக - ஒரு நாள் முழுமையாக மின்சாரம் தடைப்பட்ட நிலைகள் தொடர்பாக, விசாரணை நடாத்திய இந்தியா, அமெரிக்கா மற்றும் இலங்கையின் கம்பனி ஆகிய மூன்றும் செயற்படுத்துகின்ற ஏ.ஈ.எஸ் என்ற நிறுவனம் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

சாதாரண விடயம்காரணமாகத்தான் இந்த மின்சாரம் தடைப்பட்டது. என்றும் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாமல் பார்க்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (01)

**மனித உரிமைகள் தினமாகிய கடந்த 10 ஆம் திகதி - பிரான்ஸைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் தமிழர் மனித உரிமைகள் நிலையத்தின் பொதுச் செயலாளர் எஸ்.வி.கிருபாகரன் - நமது ஈழநாடு காரியாலயத்திற்கு நேரில் வருகை தந்து, ஆசிரியர் பீடத்தினருடன் கலந்துரையாடினார். அவருடனான உரையாடலின் சில முக்கிய பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன.**

# தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை —— உலக அரங்கிற்கு கொண்டுசெல்வதே எமது நோக்கு

**தமிழர் மனித உரிமைகள் தொடர்பான அமைப்பின் தோற்றம், அது ஆற்றும் பணி, குறிக்கோள், என்பது பற்றிய**



**கருத்துக்களைக் கூறுங்கள்?**

இலங்கைத்தீவில் வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் - போரின் காரணமாக வெளியேறியுள்ளனர். இவர்கள் பல்வேறு சிந்தனைகளுடன் வெளிநாட்டில் செயற்பட்டுள்ளனர். இவர்களில் இருவகையினர் வெளிநாட்டில் இருந்தபோதும், அவர்கள் நாட்டுப்பற்றோடு வெளிநாடுகளில் செயற்பட்டு வருகின்றார்கள்.

இலங்கையில் இயங்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுபோன்ற பொதுவான மனித உரிமை ஆணைக்குழுக்கள் சரியாகச் செயற்படுகின்றனவா என்ற சந்தேகம் நிலவிவருகின்றது.

இப்படியான காரணங்களை வைத்து தொடங்கப்பட்டதுதான் இந்த மனித உரிமைகள் ஆணைக்குழு. உதாரணமாக - தென்மராட்சியில் ஒரு சம்பவம் நடக்கிறது என்றால், அதன் முழுமையான விபரங்கள் சர்வதேச அமைப்புக்களால் வெளிநாடுகளில் வெளிப்படுத்துவதில்லை.

இப்படியான காரணங்களை வைத்து வடக்கு - கிழக்கில் புலம்பெயர்ந்த மக்களின் தேவை கருதி, மனித உரிமைகள் அமைப்பை உருவாக்கினோம்.

அவ்வாறு தொடக்கப்பட்ட பின்னர் பத்திரிகைச் செய்திகள், உள்நாட்டில் இருந்து வரும் செய்திகள், அறிக்கைகள் முதலியவற்றை வைத்து - ஜனாதிபதிக்கோ, பிரதமருக்கோ, ஏனைய பொது அமைப்புக்களுக்கோ உடனடியாகத் தகவல்களை கொடுக்கக்கூடிய வகையில் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இதைவிட, ஐக்கிய நாடுகள் சபையில் ஏப்ரல், மே மாதங்கள் மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் மேற்கொண்டு, முக்கியமான இரு மனித உரிமைகள் மாநாடுகளில் - பல தலைவர்கள் பங்கு கொள்கின்றார்கள். விசேட நிபுணர்கள் கொண்ட இந்தக்குழு உலகத்திலுள்ள மனித உரிமைகள் பற்றிய விபரங்களை ஆராய்கின்றனர்.

இந்த அமைப்பினூடாக நாளாந்தம் முக்கியமான அறிக்கைகளை விடுவதோடு, வருடத்தில் முக்கியமான இரண்டு அறிக்கைகளைத் தயாரிக்கின்றோம். மனித உரிமைகளில் இரண்டு விதமான மனிதஉரிமைகள் பற்றிக் குறிப்பிடுவார்கள்.

சமூக, கலாசார, பொருளாதாரப்பிரிவு என்பது ஒருவகையானது. பொதுமக்கள் சார்ந்த விடயம் என்பது மற்றையது. முதலாவது பிரிவுக்குள் என்ன வருகின்றது என்றால், ஒருவருடைய உணவு, உடை, கல்வி இப்படியான உரிமைகள் மீறப்படும்போது, அந்த விடயங்கள் தொடர்பானவை ஆகும். அடுத்த பிரிவிற்குள் கைது, கொலை, காணாமற்போதல், சித்திரவதை, பாலியல் வன்முறை போன்ற அம்சங்கள் வருகின்றன.

இங்கு நடைபெறுபவை பெரும்பாலும் இந்த இரண்டு வகையில் அடங்கக்கூடியதாகத்தான் இருக்கும். இவற்றை நாங்கள் வருடத்திற்கு இரண்டுமுறை அவை கூடுதலாக நடைபெற்ற இடம், பெயர் விபரங்கள், சம்பவம், திகதி முதலிய விபரங்களைக்கொண்டு, அறிக்கைகள் தயாரிப்போம்.

அந்த அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைப்பிற்குக் கொடுத்து வருவோம். இவைபற்றிச் சர்வதேச அமைப்புக்கள் பலவும் அவற்றிற்குப் பல தகவல்கள் கொடுக்கின்றன. இப்படிக் கொடுக்கும்போது, அவற்றை ஆராய்ந்து, அவற்றின்மூலம் ஐக்கிய நாடுகள் சபையின் பிரிவினால் தங்களுடைய விசேட குழுவினால் அறிக்கை கொடுக்கப்படும்.

எங்களுடைய அமைப்பு 1994 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதற்கு முன்னரும் இப்படியான அறிக்கைகள் வந்துள்ளன. எனினும், அவற்றில் கொடுக்கப்பட்ட மனித உரிமை சம்பவங்கள் குறைவு. எங்களுடைய அமைப்பு பெருமளவிலான அறிக்கைகளைக் கொடுக்கும்போது, அரசின்மீது அழுத்தங்கள் அதிகரிக்கின்றன.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் மீது ஒரு போர் திணிக்கப்பட்டுள்ளது.

அவர்கள்மீது பல துன்பங்கள் இழைக்கப்படுகின்றன என்பது தொடர்பான விபரங்களைக் கொடுக்கின்றோம்.

மனித உரிமைகள் மீறப் படுகின்ற நாடுகளின் வரிசையில், இலங்கைக்கான இடம் இரண்டாவது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஐக்கிய நாடுகள் சபையின் கணக்கெடுப்பின்படி இத்தகவல் வெளியாகியுள்ளது. இதில் முதல் இடத்தில் உள்ள நாடு ஈராக் ஆகும்.

இலங்கையில் நடக்கும் மனித உரிமைகள் தொடர்பாக, அறிக்கைகளை வெளியிடுவதில் முழுமையான பங்களிப்பை நாங்கள்தான் செய்கின்றோம் என்பதைவிட, அந்த விடயங்களை வெளிக்கொணர்வதில் நாங்களும் பங்களிப்பை வழங்குகின்றோம்.

வடக்கு - கிழக்கிலுள்ள அமைப்புக்கள், தனிநபர்கள், உறவினர்கள் மூலமாகச் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நாங்கள் இந்த அறிக்கைகளைத் தயார் செய்கின்றோம்.

இப்படியான வேலைகளை நாங்கள் செய்யும்போது, இலங்கை அரசின் பெரியளவிலான எதிர்ப்பை ஐக்கிய நாடுகள் சபையில் நாங்கள் எதிர்கொள்கின்றோம். பலதரப்பட்ட பிரசாரங்கள் எங்கள் அமைப்புக்கு எதிராகச் செய்யப்படுகின்றது.

நாங்கள் அறிக்கைகளை வாசிக்கும்போது, அவை சரியானவையா, பிழையானவையா என்று எங்களுடன் மோதவருவார்கள். அந்தச் சபையில் வருகின்ற கேள்வி என்னவென்று சொன்னால், நீங்கள் மனித உரிமை மீறல்கள் சம்பவங்களை முழுமையாகத் தொகுத்துத் தருகின்றீர்களா என்பதேயாகும்.

எங்களுடைய அமைப்புக்கு என்று ஒரு கொள்கை இருக்கின்றது. அது எப்படியான கொள்கை என்றால் - இலங்கைத்தீவில் எந்தெந்த மனித உரிமை மீறல்களை, முக்கியப்படுத்தாமல் அல்லது பெரிதாக்காமல் விடுகின்றனவோ, அவற்றைத் நாம் வெளிப்படுத்துகின்றோம்.

குமார் பொன்னம்பலத்தின் கொலையை இந்தவகையில் நாங்கள் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தினோம். நாங்கள் வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளாக ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றியும் இருக்கிறோம்.

**உங்களுடைய அமைப்பின் பிரதிநிதி ஒருவரை அனுப்பி, உங்கள் அமைப்பின் சார்பில் பேசமுடியாமல் இருப்பதற்கு என்ன தடையுள்ளது?**

ஒரு சர்வதேச அமைப்பாக இருக்கும்போது, அது ஐக்கிய நாடுகள் சபையில் பதியப்பட்ட ஒரு அரசசார்பற்ற நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

அப்படியான முயற்சிகளை எடுத்தோம். 1992 ஆம் ஆண்டு மே மாதம் அந்தச் கூட்டத்திற்கு அழைத்தவர்கள் - நாங்கள் அந்தக் கூட்டத்திற்கு போயிருக்கும்போது, அங்கீகாரம் பெறுவதற்காக, ஐக்கிய நாடுகள் சபையின் அந்தஸ்தைப் பெறுவதற்கு, நியூயோர்க்குக்குச் சென்ற ஒரேயொரு தமிழர் அமைப்பு என்றால், அது எமது அமைப்புத்தான் என்று சொல்ல விரும்புகிறேன்.

நாங்கள் போய் இருக்கும்போது, கதிர்காமரின் பொய்ப்பிரசாரம் பெரியளவில் எடுபட்டது. அந்த அந்தஸ்தை வழங்கும் உறுப்பு

> *இலங்கையிலுள்ள மனித உரிமை அமைப்புக்களில் பல சரியான முறையிலே செயற்படுவதில்லை. நாம் உண்மையான பிரச்சினையை உலக அரங்கிற்குக் கொண்டுவரும்போது, இலங்கை அரசின் எதிர்ப்பையும், அழுத்தத்தையும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது. குறிப்பாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் பொய்ப் பிரசாரத்திற்கு எதிராக நிற்பது என்பது கடினமாக இருந்தது. அவ்வாறிருந்தும் இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நாம் ஐக்கிய நாடுகள் சபையிலும் உரையாற்றி இருக்கின்றோம்.*

நாடுகளில் அமெரிக்கா, இந்தியா ஆகியன முக்கிய நாடுகளாக அமைந்தன. இலங்கை ஒரு பார்வையாளர் நாடாக இருந்து, அந்த இரு நாடுகளையும் ஏவிவிட்டது. எமது அமைப்பு ஒரு நடுநிலைமையில்லாத ஒரு அமைப்பு. பக்கச்சார்பாக இயங்குகின்ற ஒரு அமைப்பாக செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டுக்களை அந்த நாடுகள் எம் மீது திணித்தன.

நாங்கள் வைத்த தகவல்கள் எதனையும் பொய்யென்று சொல்லாமல் எங்கள் அமைப்பையும் தனிப்பட்ட நபர்களையும் பொய்யென்று கூறினார்கள். எமது அங்கீகாரத்துக்கான விண்ணப்பத்தை எதிர்த்தார்கள். அப்படியிருந்தாலும் பல நாடுகள் எம்மை ஆதரித்தன. முக்கியமாக பிரான்ஸ் எம்மை ஆதரித்தது. வாக்கெடுப்பிற்கு விடவேண்டும் என்று கூறியது. ஆனால், அவ்வாறு விடப்படவில்லை. அமெரிககாவின் எண்ணம் நிறைவேறியது.

இதனால் பல நன்மைகளும் ஏற்பட்டன. வேறுநாடுகள் இதுவரை இல்லாதவகையில் பலவகைப்பட்ட ஆதரவினை எமக்கு வழங்கின. எமது தகவலை உறுதிப்படுத்த இன்னமும் அங்கு சாட்சிகள் இல்லை.

**நீங்கள் கொடுத்த தகவலின்படி என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?**

சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள்மீது, நற்சான்றிதழ்கள் வழங்கினோம். அவற்றை நாங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைகள் அமைப்பிற்கு வழங்கியபோது, அவர்கள் அதை ஆராய்ந்தும் அந்த அறிக்கையை அது தொடர்பான பிரிவிற்கு அனுப்புகின்றார்கள். பின்னர் நீங்கள் அனுப்பிய தகவல்கள் எமக்குக் கிடைத்தன என்கின்ற தகவல்களை எமக்குத் தருகின்றார்கள்.

ஐக்கிய நாடுகள் மனிதஉரிமை அமைப்பில் கொடுக்கப்படும் கேள்விகளுக்கு ஒரு நாடு கட்டாயம் பதிலளிக்க வேண்டும். ஆனால், அரசாங்கம் அவ்வாறு பதில் அளிப்பதில்லை. அவசரமானவை தவிர்ந்த விடயங்களை ஒரு முறைதான் இங்கு ஆராய்வார்கள். அப்படி ஆராய்கின்றபோது, அரசு பதில் சொல்லாமல் விடுவதால் அவை காலம் தள்ளிப்போகின்றன.

**நீங்கள் அறிக்கைப் படுத்துகின்றீர்கள் அவை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் கேள்விகளாக கேட்கப்படுகின்றன. இலங்கை அரசு பதில் சொல்லவில்லை. இது தொடர்பாக அழுத்தங்கள் சர்வதேச நாடுகளிடம் இருந்து கிடைத்திருக்கின்றனவா?**

அவுஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை இலங்கை மீது பல அழுத்தங்களைப் பிரயோகித்தன. இலங்கையில் நடைபெறுகின்ற சம்பவங்களை உடனடியாக நிறுத்தவேண்டும். போர் நிறுத்த உடன்பாடு மேற்கொள்ளவேண்டும் என்றெல்லாம் வேண்டுகோள் விடுத்தனர். ஒரு நாட்டின் மனித உரிமைகள் பற்றி வேறு நாட்டினர் கதைக்கும்போது, இவ்வாறான கேள்விகள் தொடுக்கப்படுகின்றன. வெளிநாட்டில் உள்ள சர்வதேச அமைப்புக்களும் இலங்கை மீது கண்டனங்களை வைத்திருக்கின்றன.

**தற்போது நடைபெறுகின்ற சமாதான முன்னெடுப்புக்கள், பாதை திறப்பு சம்பவங்கள் காரணமாக நிலவும் அமைதிச்சூழலைப் பயன்படுத்தி நீங்கள் உங்கள் அமைப்பை பதிவு செய்துகொள்ள அங்கீகாரம் பெற்றுக்கொள்ள முடியற்சி செய்யவில்லையா?**

நிச்சயமாக அதற்கான முயற்சிகளை செய்துவருகின்றோம். ஒரு அமைப்பின் அங்கத்துவம் மறுக்கப்பட்டால், அந்த அமைப்பு இரண்டு ஆண்டுகளின் பின்னர்தான் மீண்டுமொரு முயற்சியில் ஈடுபடமுடியும். அப்படியொரு விதிமுறை அங்கு உள்ளது. 2003 ஆம் ஆண்டில் அதற்கான முயற்சிக்கு வாய்ப்பு இருந்தது. எனினும், முன்னர் இருந்த நாடுகளின் அங்கத்துவம் இருப்பதால், அடுத்து வரும் ஆண்டுகளில்தான் இதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாக இருக்கும்.

கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் நாங்கள் இங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டு, கொள்வதற்காக வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு வந்தோம். ஒரு அறிக்கையை ஐக்கிய நாடுகளின் சபையில் கொடுத்தோம். அதை பெருமளவில் ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக்கொண்டது. நாங்கள் முன்பு கூறினோம் அப்படி இப்போதும் கூறுகின்றோம். நேரில் பார்த்தவற்றை நாங்கள் தெளிவாகக் கூறுகின்றோம் என்று அவர்கள் நேரடியாகவே உண்மை என்று உறுதி செய்தார்கள்.

**சுயாதீனமாக இயங்குவதற்கு எதுவித அனுமதியும் தற்போது உங்களுக்கு இல்லை அப்படித்தானே?**

நிச்சயமாக இல்லை. பிரான்சில் மனித உரிமைகள் அமைப்பாக இயங்குவதற்கு அது பதியப்பட்டது, அவ்வளவுதான்.


**ஏனைய அமைப்புக்களுடன் உங்களுக்கு தொடர்பு உண்டா?**

நிச்சமாக உண்டு எங்களிடம் உள்ள தகவல்களை நாங்கள் ஏனையோர்க்கும் அனுப்புவோம். அதனைப் போன்று எங்களுக்கு தேவையான விடயங்களை நாங்கள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வோம்.

(தொடரும்...)

# கரம்பொன் பகுதிக்கான மின்விநியோகத்தில் பாரபட்சம் காட்டுவதேன்?

## மக்கள் மன்றம்



ஊர்காவற்துறை கரம்பொன் பகுதியில் வசிக்கும் மக்கள் - கடந்த 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து, மீண்டும் 1996 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்து எட்டு வருடங்கள் ஆகின்றன.

ஆனால், கரம்பொன் கிழக்கு, கரம்பொன் மேற்கு ஆகிய பகுதிகளில் வதியும் மக்கள் - இன்னமும் குப்பிவிளக்குடனும், அரிக்கன் லாம்புடனும் தமது இரவுப் பொழுதினைக் கழித்து வருகின்றனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டுமுதல், ஊர்காவற்துறை நகரப்பகுதியில் ஓர் மின்பிறப்பாக்கி பொருத்தப்பட்டு, ஊர்காவற்துறை நகரப்பகுதிக்கும் அதனை அண்டிய பகுதிக்கும் மின்னிணைப்புப் பொருத்தப்பட்டு, மின்சாரமும் வழங்கப்பட்டு வருகின்றது.

ஆனால், மேற்குறிப்பிட்ட கரம்பொன் பகுதிக்கு இன்னமும் மின்சாரமோ மின்னிணைப்போ வழங்கப்படவில்லை. இது தொடர்பான விண்ணப்பங்களும், கடிதங்களும் வடபிராந்திய மின்சார சபைக்கும், பிரதேசசபைக்கும், உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கும் அனுப்பப்பட்டன.

ஆனால், அவர்கள் ஓர் ஒழுங்கான நடைமுறையினை மேற்கொள்ளாது, இந்தப் பகுதிகளுக்குப் பதிய மின் கம்பங்கள் நடப்பட்டாலே மின்னிணைப்பு வழங்கமுடியும் எனக்கூறி, மின்கம்பங்கள் நாட்டுவதற்குக் குழிகள் தோண்டித் தரும்படி அந்தப் பகுதி மக்களுக்குப் பணித்தனர்.

அதன்பின்னர், குழிகள் தோண்டப்பட்டன. எனினும், அதற்கான மின்கம்பங்கள் நாட்டப்படவில்லை. பருவமழை பெய்தமையினால், குழிகள்யாவும் மூடப்பட்டன.

அதன்பின்னர், சம்பந்தப்பட்டவர்கள் இதுவ்வரைக்கும் இந்தப் பகுதிக்கு மின்னிணைப்பினை வழங்குவதற்கான முயற்சிகள் எதனையும் மேற்கொள்ளவில்லை.

தீவகத்தின் பிற இடங்களில் மின்சாரம் வழங்கப்பட்டு - கத்தோலிக்க மாணவர் விடுதி, மாணவிகள் விடுதி, கன்னியாஸ்திரிகள் மடம், போசனசாலை, பெந்தக்கோஸ்சபை, வெதுப்பகம், தபால் நிலையம், பாடசாலைகள் இதனைவிட - குடியிருப்பாளர்கள், கணினிப்பாவனையாளர்கள் எல்லாவற்றும் நிறைந்த இந்தக் கரம்பொன் பகுதிக்கு மின்னிணைப்பு வழங்கப்படாமையையிட்டும், பாடசாலைகளிலுள்ள கணினிகளை இயக்கமுடியாமையையிட்டும் - கரம்பன் கிராமம் இருளில் மூழ்கியுள்ளமை குறித்தும் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்தியும், உரிய நடவடிக்கை எடுக்காததையிட்டு கரம்பொன் பகுதி மக்கள் கவலையும், விசனமும் கொண்டுள்ளனர்.

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்.

# இந்திய பிரிவினைவாதிகள் மீது பூட்டான் படையினர் தாக்குதல்!

## இரு பகுதியிலும் 70 இற்கு மேற்பட்டோர் பலி



இந்திய பிரிவினைவாதிகளுக்கும் - பூட்டான் அரச படைகளுக்கும் இடையே நடைபெற்ற சண்டையில் - இரு பகுதியிலும் 70 இற்கு மேற்பட்டடோர் கொல்லப்பட்டதாகவும்,

தமது பல முகாம்களை தாக்கமுற்பட்ட அரச படையினரைத் தாக்கியுள்ளதாகவும் போராளிக் குழுத் தலைவர் பி.பி.சிக்கு தெரிவித்தார்.

இந்த மோதலில் 32 போராளிகள் கொல்லப்பட்டதாகவும், 80 இற்கு மேற்பட்டவர்கள் காயமுற்றதாகவும் பூட்டான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

30 இற்கு மேற்பட்ட இந்திய போராளிக் குழுக்கள் பூட்டானில் தமது தளங்களை அமைத்திருந்தனர். சுமார் 3000 பேரைக்கொண்டுள்ள இக்குழுவினரை அகற்றுவதற்கு பூட்டான் முயற்சித்துவருகிறது.

போராளிக் குழுக்களின் குடும்பத்தினர் இத்தாக்குதல்களில் சிக்கியுள்ளதால் அவர்களைப் பாதுகாக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் அசாமின் விடுதலைக்கான ஐக்கிய முன்னணி கோரியுள்ளது.

திங்கட்கிழமை தாக்குதல்கள் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை 39 போராளிகள் கொல்லப்பட்டும், 50 பேர்வரை காயமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பாதிக்கப்பட்ட பூட்டான் படையினரை இந்திய ஹெலி கொப்ரர்களின் மூலம் - வைத்திய சிகிச்சைக்காக இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தியாவின் அழுத்தம் காரணமாக பூட்டானிய அமைச்சர்கள் போராளிக் குழுக்களை வெளியேற்ற எடுத்த முயற்சிகள் அதிகம் வெற்றியளிக்கவில்லை எனவும் தெரியவருகிறது.

# ஆந்திராவில் ஏற்பட்ட புயலால் ஐம்பதுக்கு மேற்பட்டோர் பலி!

இந்தியாவின் தென்பகுதியில் அமைந்துள்ள ஆந்திரப் பிரதேசத்தில் மழையுடன்கூடிய புயற்காற்றினால் 50 இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மணித்தியாலத்திற்கு 100 மைல் வேகத்தில் வீசிய புயற்காற்றினாலும், பலத்த மழையினாலும் கட்டடங்களும், பயிர்களும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

800 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது வீடுகளை இழந்துள்ளதாகவும், 3 லட்சம் ஏக்கர் வரையான தோட்ட நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பி.பி.சியின் செய்தியாளர் தெரிவித்தார்.

20 ஆயிரத்துக்கு மேற்பட்ட கிராம மக்கள் பாதுகாப்பான பிரதே



சங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக செய்தி ஸ்தாபனமொன்று தெரிவித்துள்ளது.

இந்த மாநிலத்தின் அண்டை மாநிலமான ஒரிசாவில், 1999 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடும் புயலின் போது 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலக நோக்கு

# அமெரிக்க தளம் மீதான தாக்குதலே தவறுதலாக மக்கள் மீது நடத்தப்பட்டது

## கைதுசெய்யப்பட்ட போராளி தெரிவிப்பு


அமெரிக்கப்படையினால் துருக்கியில் உபயோகிக்கப்பட்டு வந்த தளம் ஒன்றைத் தாக்குவதற்கு ஒஸாமா பின்லேடன் திட்டமிட்டிருந்தார். ஆனால், அத்தளத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த பலத்த பாதுகாப்புக் காரணமாக, முஸ்லிம் பொதுமக்கள் மீது தாக்குதல் நடந்ததாக, கைதுசெய்யப்பட்ட முஸ்லிம் போராளி தெரிவித்துள்ளார்.

அண்மையில் - துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல்லில் நடைபெற்ற தாக்குதல்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் தெரிவித்த தகவல்களில் - ஆப்கானிஸ்தானிலுள்ள அல்-கொய்டா அமைப்பினால் பயிற்சியளிக்கப்பட்ட துருக்கிய தீவிரவாதிகளே இந்தத் தாக்குதலை நடத்தியதாக தெரியவந்துள்ளது.

துருக்கியர்கள் கொல்லப்படக்கூடாதென்ற நிபந்தனையின் பிரகாரமே, பின்லேடன் தாக்குதலுக்கு அனுமதி வழங்கியதாக அவர் தெரிவித்தார்.

ஆனால், போராளிகள் இரு தேவாலயங்களையும், பிரித்தானிய வங்கியொன்றையும், பிரித்தானிய தூதுவராலயத்தையும் தாக்கியதில்- 62 முஸ்லிம்கள் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் எண்ணெய்த்தாங்கி தீப்பற்றி பத்து பொதுமக்கள் பலி; 15 பேர் காயம்!



பாக்தாத்தின் தென்பகுதி நகரான பயா என்ற பிரதேசத்தில் பிரயாணம் செய்துகொண்டிருந்த எண்ணெய்த் தாங்கியொன்று வெடித்ததில் தீப்பற்றிக்கொண்டதாகவும், அதைப் பின்தொடர்ந்த நான்கு வாகனங்களும் தீப்பற்றிக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் 10 பொதுமக்கள் கொல்லப்பட்டும் 15 பேர்வரை காயப்பட்டுள்ளதாகவும் ஈராக்கின் உள்நாட்டமைச்சர் அஹமட் ஹக்கீம் இப்ராகிம் தெரிவித்தார். இந்த விபத்தில் சிக்கியோரின் உடல்கள் பாதையோரத்தில் சிதறிக் கிடந்ததாக பேருந்து சாரதி தெரிவித்தார்.

மேலும் இந்த எண்ணெய்த் தாங்கியின் முன்பாக அமெரிக்க இராணுவ அணியொன்று பிரயாணம் செய்துகொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இந்த வண்டியின் பின்னால் பிரயாணம் செய்துகொண்டிருந்த வேறொரு வண்டி இதன்மீது மோதியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.


இதனிடையே சமரா பகுதியில் 80 இற்கு மேற்பட்ட சதாம் ஆதரவாளர்களைக் கைதுசெய்துள்ளதாக அமெரிக்கப்படையினர் தெரிவித்த



னர். ஹெலி கொப்ரர்கள், கவச வாகனங்களின் உதவியுடன் இவர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கை நேர்கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## முதன்முதலில் விமானம் பறந்த


# நூறாவது ஆண்டு தினம் கொண்டாடப்படுகின்றது!



(கரோலினா)

உலகில் முதன்முதலில் இயந்திரத்தின் வலுவை உபயோகித்து விமானமொன்றைப் பறக்கவிட்ட 100 ஆவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டுவருகின்றது.


100 ஆண்டுகளுக்கு முன் - 30 மீற்றர் தூரத்தை, 12 செக்கன்கள் விமானத்தில் பறந்து முதலாவது விமானப் பயணத்தை ஓர்விலி ரைட் ஆரம்பித்து வைத்திருந்தார்.



முதலாவது விமானப் பயணம் ஆரம்பித்த இடமான வட கரோலினாவில் அமைந்துள்ள திற்றிகோக் என்ற கடற்கரையில் முதலில் உபயோகித்தது போன்ற விமான வடிவமைப்பில் அமைந்த விமானமொன்றை பறக்கவிடுவதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த விமானத்தில் விமானியாகக் கடமையாற்றவுள்ள கெவின் கொச்சேர்ஷ்பேக் - இந்த விமானத்தை பறக்கவிடுவதில் சிரமங்கள் உள்ளபோதும், தான் முயற்சி செய்யப்போவதாகத் தெரிவித்தார்.

வில்பர் ரைட், ஓர்விலி ரைட் ஆகிய இருவரும் தமது ஆரம்பகால வாழ்வை துவிச்சக்கர வண்டிகள் திருத்தும் தொழில் செய்ய ஆரம்பித்து, மனிதர்கள் ஆகாயத்தில் பறக்கமுடியாது என்ற கருத்தில் மாற்றம் ஒன்றை உருவாக்கியவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# புதிய வகைத் துப்பாக்கி இஸ்ரேலினால் அறிமுகம்



கோனர் சொட் என அழைக்கப்படும் புதிய துப்பாக்கியை இஸ்ரேல் கண்டுபிடித்துள்ளது.

இந்தத் துப்பாக்கியில் பொருத்தப்பட்ட விசேட சூட்டுத் தொகுதி கருவியின்மூலம், எதிரியைப் பார்க்காமலே எதிரியின் நிலையை புகைப்படக்கருவியில் காணப்படும் விம்பத்தில் அவதானித்து இலக்குத் தவறாது தாக்கமுடியும்.

இக்கருவி 15 நாடுகளில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கியின் குழலில் இந்தச் சூட்டுக்கருவியைப் பொருத்துவதன் மூலம் 400 மீற்றர் தூரம் வரை சுடமுடியும்.

இதனை எவ்வகையான துப்பாக்கிகளிலும், பொருத்தமுடியுமென, இதை தாயாரித்த நிறுவனம் தெரிவித்தது.

# புரட்சிவாதக் குழுவின் தலைவருடன் ஆதரவாளர்களும் கிரேக்கத்தில் கைது!



கிரேக்கத்திலுள்ள புரட்சிவாத குழுவொன்றின் தலைவர் ஜியோநோபோயுலஸ்சும் வேறு 15 இற்கு மேற்பட்ட உறுப்பினர்களும் - கடந்த 25 ஆண்டுகளாக இவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள கொலைக்குற்றங்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ளனர். இக்குழுவின் தலைவரான 59 வயதுடைய ஜியோரோபோயுலஸ் அமெரிக்க புலனாய்வுத்துறை அதிகாரி கிரேக்கத்திலுள்ள பிரித்தானிய பாதுகாப்பு அதிகாரி உட்பட, பலரின் கொலைக்கு காரணமாக அமைந்திருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழுவொன்றினால் 9 மாதங்கள் 2500 இற்கு மேற்பட்ட தகவல்களை ஆராய்ந்தபின் இதன் தலைவருக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளார்கள். கிரீசில் பயங்கரவாதம் தொடர்பான முதலாவது விசாரணை இதுவாகும்.

இக்குழுவின் தலைவருக்கு 19 கொலைகளுக்கு திட்டமிட்ட காரணத்துக்காக, 21 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# நக்கீரன் கோபால் மீதான மனு உச்ச நீதிமன்றத்தால் தள்ளுபடி

நக்கீரன் கோபால் தொடர்பான மனுவை உடனடியாக விசாரிக்குமாறு தமிழக அரசின் கோரிக்கை மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது. பொடா சட்டம் செல்லும் என்று உச்சநீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது. இதைத் தொடர்ந்து தமிழக அரசின் வழக்கறிஞர் வைத்தியலிங்கம் நேற்றுக்காலை உச்சநீதிமன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல்செய்தார்.

அதில், பொடா சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள பத்திரிகையாளர் நக்கீரன் கோபால் வழக்கு தொடர்பான மனு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இதை உடனடியாக விசாரித்து கோபால் மீதான விசாரணையைத் தொடங்க வகைசெய்யவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார். இந்த மனுவையே உயர்நீதிமன்ற நீதிபதிகள் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# உயர் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி ஜனாதிபதியை கோரும் மனு நிராகரிப்பு

(கொழும்பு)

சுதந்திரத் தேர்தல் ஆணைக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமிக் கப்படாமை குறித்து விளக்கம் கோருவதற்காக ஜனாதிபதி உயர் நீதிமன்றத்தின் முன் சாட்சியமளிக்க வேண்டும் எனக்கோரி தாக்கல் செய் யப்பட்டிருந்த மனுவை நேற்று மேல் முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள் ளது.

சமூக நலன்புரிச்சட்ட மன்றத்தால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு வையே மேல்முறையீட்டு நீதிமன் றம் நிராகரித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க அரசியல் அமைப்புச் சபைத் தலைவர், சபாநாயகர் உட்பட 18 பேர் பிரதிவாதிகளாக இந்த மனு வில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசியல் அமைப்புச் சபை சிபார்சிற்கு ஏற்ப தேர்தல் ஆணைக் குழுவிற்கு உறுப்பினர்களை நிய மிக்க உத்தரவு பிறப்பிக்குமாறு மனுவில் கோரப்பட்டிருந்தது.

எனினும் நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதிக்கு அரசியல் அமைப்பின் பிரகாரம் நீதிமன்றம் எந்த ஒரு உத்தரவையும் பிறப்பிக்க முடியாது எனத் தெரிவித்தே மேல் முறையீட்டு நீதிமன்றம் இந்த மனுவை நிராகரித்துள்ளது. (01)

## நாற்சந்தி

"விடுதலைப்புலிகளின் நானூறு தற் கொலைப்படைப் போராளிகள் கொழும்புக்குள் நுழைந்திருக்கிறார்களாமே...!"

"ஆர் சொன்னது...?"

"வேறையார் இவ்வளவு துல்லியமாக கணக்கிட்டு கூற முடியும்? சந் திரிகாவே தான்...!"

"கொஞ்சநாளைக்கு முன் முன்னூறு பேர் ஊடுருவி உள்ளனர் என்றல்லே அறிக்கை விட்டவ...!"

"எப்படியோ... அம்மணி நாட்டைக் குழப்பத் தொடங்கிட்டா என்பது விளங்குது... தற்கொலைப் போராளிகளை காரணம் காட்டி சமாதானத்தை கிடப்பில் போட முயற்சிக்கிறா போலை...!"

"கிடப்பில் என்ன... குழிக்குள் போட தீர்மானிச்சா என்று சொல்லு?"

"சில வாரங்களில் இந்தத் தற்கொலைப் படைப் போராளிகளைத் பிடித்துப் போடுவார் என்றுமெல்லே சூளுரைத்திருக்கிறார்..."

"சரியாப் போச்சு இனி கொழும்பு நகருக்குள்ளை தமிழ் மக்கள் நிம் மதியா இருக்க அம்மணி விடப்போறதில்லை என்று சொல்லு..."

"ஓமோம் தற்கொலைப்படைப் போராளிகளைத் தேடி சுற்றிவளைப்புத் தேடுதல்... என்றெல்லாம் தொடங்கப் போறா போலை கிடக்கு..."

"அதுக்காகத்தானே இதனை சொல்லியிருக்கிறா... மீண்டும் களுத் துறை... வெலிக்கடை என்று எங்கடை தமிழ் இளைஞர்களை அள்ளிச் செல்லப் போகினம் பார்..."

"அப்ப... மீண்டும் சந்திரிகா யுகம் ஆரம்பமாகப் போகுது போலை...?"

"அது என்னவோ... உண்மைதான்... கனகு இனிச் சர்வதேச சமா தான அறிவுறுத்தல்காரர்கள்தான் இதுக்கெல்லாம் பொறுப்பேற்கவேணும்..."

"பண்டா பரம்பரை கொண்டா தமிழன் உயிரோ என்று நாண்டுகொண்டு நிற்பது என்னத்துக்கோ தெரியேல்லை கடவுள்தான் அவர்களைக் காப்பாற்ற வேண்டும் மணியம்..."

-தெருவாசி

# ஹக்கீமுக்கு எதிரான மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா தாக்கல் செய்திருந்த மனுவை விசாரிக்க மேன்முறையீட்டு நீதிமன் றம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது. ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா கொழும்பு மாவட்ட நீதி மன்றில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கட்சியின் தலைவராக செயற்பட னுமதிக்கக்கூடாது எனக்கோரும் மனுவைத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை இடம் பெற்றிருந்தது.

இதையடுத்து கட்சித்தலை வராகச் செயற்பட கொழும்பு நீதி மன்றம் ரவூப் ஹக்கீமுக்கு இடைக் கால தடைவிதித்து. அமைச்சர் ஹக்கீமின் மேன்முறையீட்டை அடுத்து அது விலக்கிகொள்ளப் பட்டது. இதனைத் தொடர்ந்தே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த மனுதாக்கல் செய்யப்பட்டது.

## புலனாய்வாளர்...

கடந்த வெள்ளிக்கிழமை கொழும் பில் சிகரட் வாங்கிக்கொண்டிருந்த புலிகள் இயக்க முன்னாள் உறுப்பி னரான பாபு என்பவர் சுடப்பட்ட தாகப் பொலிஸ் பேச்சாளர் நியன்ஸி பெரேரா தெரிவித்தார்.

புலிகள் இயக்கத்திலிருந்து ஒரு வருடத்திற்கு முன்னர் விலகிய இந்த இளைஞரே பொலிஸாருக்கு தகவல் களை வழங்கிக்கொண்டிருந்த ஒரே ஒரு தமிழர் என்றும் பொலிஸ் தரப் பினை மேற்கோள்காட்டும் செய்தி கள் தெரிவிக்கின்றன.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 95.90 | 97.70 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 166.86 | 167.22 |
| 1 யூரோ | 116.47 | 118.38 |
| 1 சுவிஸ் பிராங் | 73.97 | 75.75 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 71.05 | 72.16 |
| 1 ஜப்பானிய யென் | 00.88 | 00.89 |
| 1 சவூதி றியால் | 25.67 | 25.67 |

## கூட்டணியின்...

தமிழர் விடுதலைக் கூட்டணி யின் யாப்பின்படி செயலாளர் கூட்டத் தினைக் கூட்டவேண்டுமாயின் தலை வரின் அனுமதியைப் பெறவேண்டும். ஆனால், எவ்வித அனுமதியுமின்றி அம்பாறையில் கூட்டம் இடம்பெற வுள்ளமை கட்சியின் யாப்பை மீறு வதாக உள்ளது எனத் தெரிவித்தே ஆனந்தசங்கரி நீதிமன்ற முறைப் பாட்டில் தெரிவித்தார்.

இதேவேளை, தன்னைப் பதவி யிலிருந்து நீக்குவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அழுத்தம் கொடுத்து வருவதாகவும், தனது உயிருக்கு ஆபத்து ஏற்படவாய்ப் பிருப்பதாகவும் அவர் தனது மனு வில் குறிப்பிட்டுள்ளது.

## கிளிநொச்சிக்கு...

இணைப்புக்கள் வழங்கப்படும்.

தற்போது கிளிநொச்சியில் அறு பது தற்காலிக இணைப்புக்கள் நுண்ணலை இணைப்பூடாக யாழ்ப் பாணத்திலிருந்து வழங்கப்படுகிறது. யாழ்ப்பாண குறியீட்டு இலக்கமே இவ் றுக்கு (222) பயன்படுத்தப்படுகிறது.

அத்துடன் கிளிநொச்சி மாவட் டத்துக்கு மேலதிக நாற்பது இணைப் புக்கள் பரிவர்த்தனை நிலைய மூடாக உடனடியாக வழங்கப்பட வுள்ளன.

பரந்தனில் அமைக்கப்பட்ட புதிய நுண்ணலை தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையம், தேசிய தொலைத்தொடர்பின் ஊடாகவே மேற்கொள்ளப்படும். அத்துடன் தற்போது பாவிக்கப்படும் யாழ்ப்பாண குறியீட்டு இலக்கமான 222 இற்குப் பதிலாக 021 - 228 என்ற இலக்கம் கிளிநொச்சி, பரந்தன் நிலையங்க ளுக்கு மாற்றப்படும்.

இதேவேளை - கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் நடமாட்டம் குறைந்த பகுதியில் கையடக்கத் தொலைபேசிக்கான தொலைத் தொடர்பு கோபுரம் விரைவில் அமைக் கப்பட்டு, கையடக்கத் தொலைபேசி களைப் பாவிப்பதற்கு வழிவகை செய் யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## இந்தியாவுடனான...

கூடாது. நாம் யாழ்ப்பாணத்தில் உள்ள பலாலி விமானப்படைத்தளத்தை புனரமைப்பு செய்வதற்கு இந்தி யாவின் உதவியையே கட்டாயம் பெறவேண்டும்.

விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிக்கு இந்தியாவின் ஆதரவு மிகவும் முக்கியமானதாகும்.

இந்த பாதுகாப்பு தொடர்பான உடன்பாடு பிரதமர் ரணில் இந்தியா சென்றபோது, கடந்த ஒக்ரோபர் 19 ஆம் திகதி ஏற்பட்டது. நான்கு பக்க கூட்டறிக்கையை இரு நாடுகளுக் குமிடையே பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்பு, படைகளுக்கான பயிற்சி, அவர்களுக்கான விநியோகம் என் பன உடன்பாடு காணப்பட்டது குறிப் பிடத்தக்கதாகும்.

## தலைவர்...

லாளர் நாயகமே உறுப்பினர்க ளுக்கு அழைப்புவிடுப்பார். நிர் வாகச் செயலாளரும், அவ் அழைப்பில் கையொப்பம் இடுவார். இதற்கு மேல திகமான எதுவும் கூறப்படவில்லை.

பல மாதங்களுக்கு முன்பே இவ் வாறானதொரு கட்சிக் கூட்டம் நிகழ்த்தத் தீர்மானம் எடுக்கப்பட் டிருந்தது.

எனினும் இது ஒரு மத்திய செயற்குழுக் கூட்டம் அல்ல. இவ் வாறான கூட்டமானால் மத்தியகுழு வால் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ஒருவருக்கு எவ்வாறு அழைப்புவிடுக்க முடியும்.

ஆனந்தசங்கரியால் வழங்கப் பட்ட பல செய்திகள் சிங்கள அரசி யல்வாதிகளுக்கு இனிப்பாக அமைந்திருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்க ளைப் பரப்புவதில் அவர் தீவிரமாக செயற்படுவதாக சிங்களப் பத்திரி கைகள் சுட்டிக்காட்டின.

கட்சிக்குள் முரண்பாட்டினை தோற்றுவிக்கக்கூடிய ஒருவரை எமது கட்சிக்குள் வைத்திருப்பது எமது கட்சியின் எதிர்காலத்திற்கே பாதகமாக அமைந்துவிடும்.

இவருடன் பேசித் தீர்க்க பல முறை முயன்றோம். அவர் ஒத்து ழைக்க மறுத்தார். தமிழீழ விடுத லைப்புலிகளுடன் இணைந்த வகை யிலேயே நாம் செய்படுகின்றோம். இதனை ஆனந்தசங்கரி குழப்புகின் றார்.

அது மட்டுமல்ல மக்களும் எமக்கு வாக்களித்தது சில எதிர் பார்ப்புகளின் அடிப்படையில் ஆகும். அதற்கு மாறாக செயற்பட நாம் தயாரில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1573 திகதி: 16.12.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| K | 6 | 0 | 1 | 2 | 1 | 8 |

## ஜப்பானிய...

சேகரா ஆகியோரே சிரான் பணிப் பாளரைச் சந்தித்துப் பேச்சு நடத் தினர்.

இந்தச் சந்திப்பில் புளியங்குளத் தில் விவசாயப் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

## அத்துமீறி...

மீறி மீன்பிடித்தபோது பிடிக்கப்பட்ட எட்டு இந்திய மீனவர்களையும் கைது செய்து ஊர்காவற்றுறை பொலிஸாரி டம் கடற்படையினர் ஒப்படைத்தனர். ஊர்காவற்றுறை பொலிஸார் விசா ரணைகளை நடத்திவருகின்றனர்.

## பாதுகாப்பு நிதி...

அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு சபையில் வாக்கெடுப்பிற்கு விடாம லேயே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்மூலம் ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்ட மூன்று அமைச் சுக்களுக்குமான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு நேற்று நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மேஜர் ஜெனரல்...

இராணுவத்தில் 5 ஆவது நிலை யில் உள்ள அதிகாரியான இவர் 1971 ஏப்ரல் 26 ஆம் திகதி இராணு வத்தில் இணைந்தார். 2 ஆம் லெப்டினன் முதலாவது பொறியி யல் படைப் பிரிவில் இணைந்த சந்திரபால பொறியியல் படைப்பிரி வின் பல்வேறு உயர் பதவிகளை வகித்தவர்.

அம்பாந்தோட்டை மாவட்ட இணைப்பதிகாரியாக 1990 இல் பொறுப்பேற்ற இவர், 1991 இல் பொறி யியற் படைப்பிரிவில் பிரதம அதிகா ரியாகவும், பின்னர் திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு மாவட்டங் களில் இணைப்பதிகாரியாகவும் பதவிவகித்தவர்.

1992 ஆம் ஆண்டுக்கும் 1995 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட இரண்டரை ஆண்டு காலப்பகுதியில் வெலிஓயா பகுதி கட்டளை அதிகா ரியாகவும் இருந்த இவர், 1996 மார்ச் 31 இல் பிரிகேடியராகப் பதவி உயர்வு பெற்றதையடுத்து, இராணு வப் பொறியியலாளர்களின் பணிப் பாளராக நியமிக்கப்பட்டார்.

1998 நவம்பர் 28 இல் மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்ட சந்திரபால மிருசுவிலில் நிலைகொண் டிருந்த 55 ஆவது டிவிசனின் கட் டளை அதிகாரியாக நியமிக்கப்பட் டார்.

இதன்பின்னர் இராணுவத் தலை மையக அதிகாரிகளுக்கான பொதுக் கட்டளை அதிகாரியாகவும், மின்னே ரியாவிலுள்ள 23 ஆவது டிவிசன் தளபதியாகவும், கொமாண்டோ படைப்பிரிவின் அதிகாரியாகவும் இருந்த இவர், பின்னர் 2000 ஆண்டு நவம்பர் 18 ஆம் திகதி யாழ். படைகளின் பிரதிக் கட்டளை அதி காரியாக நியமிக்கப்பட்டார்.

2002 ஒக்டோபர் 25 ஆம் திகதி வன்னிப் படைகளின் கட்டளை அதி காரியாகப் பொறுப்பேற்ற மேஜர் ஜெனரல் சந்திரபால கடந்த 10 ஆம் திகதி யாழ். தளபதியாக நிய மிக்கப்பட்டார்.

இவரது 30 வருட இராணுவ சேவையில் - பசுபிக் இராணுவ முகாமைத்துவக் கருத்தரங்கு (அமெரிக்கா), சிரேஷ்ட கட்டளை அதிகாரிகள் கற்கைநெறி (இந்தியா), இராணுவ அதிகாரிகளின் பயிற்சி நெறி (மலேசியா), பொறியியற் படைப்பிரிவு கட்டளை அதிகாரிகள் கற்கைநெறி (இந்தியா), கொமற்சு தளபாடங்களை கையாளும் பொறி யியல் பயிற்சி (சிங்கப்பூர் மற்றும் ஜப்பான்) உட்பட பல வெளிநாட்டுக் கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்த இவர்,

வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பய ணம் செய்த பல இராணுவ ஆலோ சனைக் குழுக்களிலும் இடம்பெற்ற வர் என்பது குறிப்பிடத்தக்கது.




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.